நேரு குழந்தைகள் புத்தகலாயம்

# இளம் இந்திய வீரர்கள்

**சிக்ருன் ஸ்ரீவாஸ்தவா**

சித்திரங்கள்
**ரவி பரஞ்ஜபே**

தமிழாக்கம்
**ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தி**

nbt.india
एकः सूते सकलम्

nbt.india
एकः सूते सकलम्

**நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா**

ISBN 978-81-237-1190-4

முதல் பதிப்பு *1995*
இரண்டாம் பதிப்பு *2018* (சக *1940*)

© சிக்ருன் ஸ்ரீவாஸ்தவா
தமிழாக்கம் © நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

India's Young Heroes (*Original English*)
Ilam Indhiya Veerargal (*Tamil*)

**₹ 55.00**

வெளியீடு: இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
நேரு பவன், 5 இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, ஃபேஸ்-II
வசந்த் குஞ்ச், புதுதில்லி – 110070
Website: www.nbtindia.gov.in

nbt.india
एकः सूते सकलम्

## பொருளடக்கம்



மலைப்பாம்பின் பிடியில் 5



மரணம் அழைத்த அந்த வினாடி 16



"நான் எரிந்து கொண்டிருக்கிறேன்!" 25



இரவில் ஒரு பிசாசு ரயில் 37



"கருணை நிரம்பிய மேரி, எங்களைக் காப்பாற்று" 50



இரவில் ஒரு தாக்குதல் 61

nbt.india
एकः सूते सकलम्



## மலைப்பாம்பின் பிடியில்

நிர்மலாவுக்கு சயால் லானுபாய் போயா மீது ஏனோ ஒரு வெறுப்பு. அவளைக் கட்டோடு பிடிக்கவில்லை. ஊரார் சயாலின் அம்மாவிடம், "கால்ஜி பென், உன் மூத்த மகளைக் கண்காணி. அவள் ரொம்ப அழகி. தன் வசீகரப் புன்னகையால் சீக்கிரம் இளைஞர்களைக் கவர்ந்திடுவா..." என எதற்காகச் சொல்லவேண்டும் என்று அவளுக்குப் புரியவில்லை.

"வசீகரப் புன்னகையாம்... வெறும் இளிப்பு" என்று நிர்மலா கோபமாய் முணுமுணுத்தாள். ஆனால் சயாலின் புன்னகையில் ஒரு கவர்ச்சி இருப்பது நிர்மலாவின் உள்மனசுக்குத் தெரிந்தே இருந்தது. அந்தப் புன்னகை தோன்றும்போது அவளுடைய கண்களில் அற்புதமான ஒரு ஒளி தோன்றும்; கன்னங்களில் அழகாகக் குழி விழும்.

புன்னகைதான் கவர்ச்சியே தவிர, அவளுடைய ஒட்டுப் போட்ட ரவிக்கையும், சாயம் போன தாவணியும் நிச்சயமாய் அப்படியில்லை. அதேபோல, அவள் கைகளில் அணிந்துள்ள மெல்லிய யானைத் தந்த வளையல்களும், நிர்மலாவின் கைகளில் பளபளக்கும் பல பட்டை வளையல்களுக்குக் கிட்டே வரமுடியாது. அத்துடன், நிர்மலாவிடம் உள்ளதைப்போல அழகான நெக்லஸ், குஜராத் மாநிலத்தின் அந்த பர்த்தட் என்னும் ஆதிவாசி கிராமத்திலேயே வேறு யாரிடமும் கிடையாது! சிவப்பு இழையில் ஒளிரும் செம்மணிகளைக் கோத்துச் செய்தது அது. சயாலும் கூட, ஓடைக்கரைக்குத் துணி துவைக்க வந்த சமயத்தில் அதைப் பார்த்து அதிசயித்ததுண்டு.

“ஆ, கொள்ளை அழகு! நிர்மலா, பக்கத்தில வா பார்க்கலாம்,” என்றாள் சயால்.

ஆனால் நிர்மலா கர்வமாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு, துணிகளைக் கல்லில் அடித்துத் துவைப்பதிலேயே கவனம் செலுத்தினாள்.

“அதோ பார், ஒரு தூக்கணாங்குருவி” என்றாள் சயால், திடீரென்று.

“அது ஒண்ணும் தூக்கணாங்குருவி இல்ல. வெறும் சிட்டுக்குருவிதான்.”

“இல்லை நிர்மலா, அதன் மார்பு மஞ்சளாயிருக்கே. அதை எப்படி நீ சிட்டுக்குருவின்னு சொல்ற?”

நிர்மலா அந்தப் பறவையை உற்றுப் பார்த்தாள். வித்தியாசமாகவே தெரிந்தது. சயால் சொன்னது சரிதான், வழக்கம்போல! இதுதான் அவளிடம் நிர்மலாவுக்குப் பிடிக்காத அம்சம். அவள் சொல்வது எப்போதும் சரியாகிவிடுகிறது. தனக்குச் சகலமும் தெரியும் என்று அவள் நினைக்கிற மாதிரியும் தெரிகிறது! அவளுக்குச் சொல்லித் தரக்கூடியவரும் கிராமத்தில் ஒரே ஒருவர்தான் ஆரம்பப்பள்ளி ஆசிரியர். சயாலுக்குப் பள்ளிக்கூடம் போகப் பிடிக்கும். ஆனால் நிர்மலாவுக்கோ வயல்வெளிகளிடையே சுற்றித் திரிவதுதான் பிடிக்கும்.

“நிர்மலா, நிர்மலா” அம்மா குடிசைக்குள்ளிருந்து கூப்பிட்டாள். “மணி எட்டுக்கு மேலாகிவிட்டது. கால்நடைகளை மேய்க்க யாருமில்லை. நீ ஓட்டிப்போ. பள்ளிக்கூடம் போவதை இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்.”

அவள் குதித்துக்கொண்டே வந்தாள். மாடுகளை ஓட்டிக்கொண்டு புறப்பட்டாள். கிராமத்து எல்லையில் ஓர் அலங்கோலமான மண் குடிசை. சுற்றிலும் பழைய பாண்டங்கள் சிதறிக்கிடந்தன. அரிசியைக் கொத்த மூன்று கோழிகள் திரிந்தன. குடிசைக்கு முன்னால் ஓர் ஒன்பது வயதுச் சிறுமி காலை நீட்டி உட்கார்ந்து அரிசியைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். பக்கத்திலிருந்த குழந்தையிடம், “பச்சரிசியைத் தின்னாதே

nbt.india



nbt.india
एकः सूते सकलम्

விஜயகுமார். நீ பறவையில்லை” என்று அவள் குழந்தையைக் கடிந்து கொண்டாள். குழந்தை கலகலவென்று சிரித்தது. அந்தப்பெண், நிர்மலாவைப் பார்த்ததும் முறுவலித்தாள். “இன்னைக்கு இதுகளை எங்கே ஓட்டிப் போகப் போற?” என்று கேட்டாள்.

அந்தப் பெண் சயாலின் தங்கை என்பதால் நிர்மலா அலட்சியத்துடன் தோளைக் குலுக்கி முகத்தைச் சுளித்தாள்.

“நிர்மலா, நீ ஓடைப்பக்கம் போனா, சயாலும் எங்க கால்நடைகளுடன் அங்கே இருப்பா”

‘கால்நடைகளா! வெறுமனே ஐந்தாறு ஆடுகளைப் போய் கால்நடை என்பதா?’ நிர்மலா நினைத்துக்கொண்டாள். பிறகு சிரமப்பட்டு ஒரு புன்முறுவலை முகத்தில் வரவழைத்துக் கொண்டு, “நேரமாயிருச்சு மீராபாய், நான் வர்றேன்” என்று கிளம்பினாள். சிறிது தூரம் போனபின் மாடுகளை ஓடைக்கரைப் பாதையிலிருந்து காட்டுப்பக்கமாய்த் திருப்பினாள். சற்றுத் தொலைவில் மாடுகள் மேய வசதியான புல்வெளி இருந்தது.

செறிந்த காடு கதகதப்பாய் இருந்தது. வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டு பறந்தன. கானப்பறவைகளின் கலகலவெனும் ஒலி காற்றில் நிறைந்தது. அரசமரத்தில் அணிலொன்று தாவிற்று. அகன்ற சிறகுகளை விரித்து ஒரு பருந்து மேலெழும்பிற்று. கறுப்பும் வெள்ளையுமான அதன் இறக்கைகள் இரண்டொன்று தரையில் எங்காவது உதிர்ந்திருக்குமா என்று அவள் தேடினாள். அகப்படவில்லை. ஏமாற்றத்தோடு திரும்பி ஒரு சோம்பேறி எருமையைத் தட்டி, “உம்...நட...நட...” என்றாள்.

கடைசியாக புல்வெளியை அவள் அடைந்ததுதான் தாமதம். அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. காரணம், அங்கே ஆலமரத்துக்கு அடியில் அவளுக்குப் பிடித்தமான இடத்தில் மரத்தின் மீது முதுகைச் சாய்த்து ஒருத்தி உட்கார்ந்திருந்தாள் – சயாலேதான்!

ஒல்லிக் கால்களை மடக்கி ஏதோ கனவில் லயித்திருந்தாள், அந்தப் பன்னிரண்டு வயதுப்பெண். நடு வகிடு எடுத்து வாரி,

nbt.india

அள்ளிச் செருகிய கொண்டையை சாயம் போன மேலாக்கின் முந்தானை மூடியிருந்தது.

மாடுகளின் கிண்கிணி ஓசை கேட்டு அவள் நிமிர்ந்தாள். உடனே முகத்தில் சினேகப் புன்னகை மின்ன நிர்மலாவைப் பார்த்துக் கையை ஆட்டினாள். “நிர்மலா, வா. இங்கே நிழலுக்கு வா.”

நிர்மலா பதில் சொல்லாமல் அசட்டையாக எருமைகளை ஓட்டுவதில் ஈடுபட்டாள். ‘ஓடைக் கரைக்கோ வேறு எங்கோ போக வேண்டியது தான். இவளை விட்டுப்போனா சரி’ என்று எண்ணினாள்.

“இங்க வாயேன் நிர்மலா, ஒரு வேடிக்கை காட்டுறேன்.”

வேடிக்கையா! சயாலின் வேடிக்கைகள் என்னவென்று நிர்மலாவுக்குத் தெரியும். அத்தனையும் பள்ளிக்கூடம் மாதிரியே அலுப்பானவை, உப்புச் சப்பில்லாதவை. அவள் குரோதத்துடன் கால் கட்டை விரலால் புல்லைக் கிளறினாள்.

சாறுள்ள பசும்புல்லைத் தேடி மாடுகள் திரியலாயின. சுற்றுமுற்றும் பார்த்த நிர்மலாவின் கண்களுக்கு நிழலடர்ந்த ஒரு புதர் தூரத்தே புலப்பட்டது. முழங்கால் வரை நீண்டிருந்த கோரைகளினூடே புகுந்து அவள் போனாள்.

“இங்க வரமாட்டியா, நிர்மலா?”

நிர்மலா வெவ்வெவ்வே என்ற பழிப்புக் காட்டிவிட்டு நடந்தாள்.

“புஸ்...ஸ்...ஸ்...ஸ்...”

நிர்மலா சிலையானாள்.

அந்தச்சீறல் அவள் முதுகுத்தண்டிற்குள் சில்லிட்டது. நடுநடுங்கினாள். திரும்பிப் பார்த்தாள். விழிகளை உருட்டி வெகுண்டு சீறும் ஒரு பாம்பு – பன்னிரண்டடிக்கும் மேல் நீண்ட மலைப்பாம்பு. பசுஞ்சாம்பல் நிறத்தில் பருத்துச் சிறுகும் நீள உடல் முழுதும் கரும்பழுப்பு வைரங்களைப் பதித்தாற்போல் பளபளக்கும் வரிப்பட்டைகள். அடிப்பாகம் மஞ்சளும் பழுப்புமான புள்ளிகளுடன் சாம்பல் நிறமாய் ஒளிர்ந்தது.

நிர்மலாவின் கைகள் அவள் வாய்க்கு விரைந்தன. ஓங்கிக் கத்த முயன்றாள். முடியவில்லை. பாம்பின் பார்வையில் கட்டுண்டவள் போல, வெயிலின் வெளிச்சத்தில் சுருங்கிய அதன் உருட்டு விழிகளையே வெறித்து நோக்கினாள்.

பாம்பு முன்னேறிற்று. சினத்துடன் சீறிற்று. இதுபோன்ற பயங்கரத்தை இதுவரை அவள் பார்த்ததே இல்லை. "ஐயோ! பாம்பு! காப்பாத்துங்க!" என்ற அலறி ஓடத்தான் அவள் முனைந்தாள். ஆனால் பாம்பு அவளை வசப்படுத்திவிட்டது போல் உணர்ந்தாள். லட்சுமிபாய் பாட்டி சொன்னது சரிதான். பாம்பு, முதலை, ராட்சசப்பல்லி இவற்றைப் பற்றி அவள் சொல்லியிருந்த கதைகள் அத்தனையும் நிஜம்! பாம்புகள் மக்களை மயக்குவது உண்மைதான்!

படக்கென்று பாம்பின் தலை முன்னோக்கிப் பாய்ந்தது. உடனேயே அது தன் வாலைச் சுழற்றி நிர்மலாவின் முழங்கால்களில் இரு சுருளாய் வளைந்து பின்னிக்கொண்டது. எலும்புகள் முறிவதுபோல அவளுக்குத் தோன்றியது. வேதனை தாளாமல் வீறிட்டாள். ஆனால் வலியைவிட கிலியே அதிகம். 'நான் சாகப்போகிறேன்' என்று அவள் நினைத்தாள். "அம்மா! என்னைக் காப்பாத்து!"



nbt.india
एकः सूते सकलम्



nbt.india
एकः सूते सकलम्

பாம்பை உதறித்தள்ளப் பார்த்தாள். ஆனால் துளிக்கூட அசைய முடியவில்லை. 'பாம்பைத் தொட்டா தொழுநோய் வரும்' என்று யாரோ சொன்னது நினைவில் நிழலாடியது. உயிரோடு முழுசாய் விழுங்கிவிடப் போகிறது, பொதியாய் கனக்கும் இந்தப் பாம்பு! ஆம். லட்சுமிபாய் அடிக்கடி சொன்னமாதிரி பாம்புகள் முழுசாய்த்தான் விழுங்கும்!

தன்னை இறுக்கும் பாம்பை, பயத்தில் விறைத்த விழிகளால் அவள் வெறித்தாள். இடுப்பைச்சுற்றி இன்னொரு சுருள் போட அது வளைந்ததுதான் தாமதம், அதன்மேல் மூங்கில் கழியால் ஓங்கி ஓர் அடி விழுந்தது!

சயால்! சயால்தான் வந்துவிட்டாள்!

பாம்பின்மீது ஈவிரக்கமின்றிச் சரமாரியாய் அடிகள் விழுந்தன. பாம்பு சிலிர்த்தது. அதன் பருத்த உடல் முழுதும் துடிப்புப் பரவிற்று. ஆனாலும் அந்த மலைப்பாம்பு தன் பிடியைத் தளர்த்தவில்லை.

"சயால்! சயால்! ஐயோ நான் செத்துட்டு இருக்கேனே...!"

"இல்ல...இல்ல. நீ சாகமாட்ட" சயால் கத்திக்கொண்டே, பாம்பின் மீது தடியால் ஓங்கி ஓங்கிப்போட்டாள்.

"விஷம் ஏறுதே" அரற்றினாள் நிர்மலா.

"இது மலைப்பாம்பு. இதுக்கு விஷம் கிடையாது" என்றாள் சயால்.

"ஆனா என்னால் அசைய முடியலையே..."

"நீ அதிர்ச்சில அரண்டிருக்க. அதனால்தான் அசைய முடியல. நான் உன்னை விடுவிக்கிறேன்"

பெரிய பாம்புக்கு எதிராக கம்பு அவ்வளவாகப் பயன்படாது போகவே, அவள் கம்பை எறிந்துவிட்டுத் தன் கைகளையே உபயோகிக்கலானாள். பாம்பின் தாடைகளைக் கெட்டியாய்ப் பற்றி வாயைப் பிளக்க முனைந்தாள்.

"அது உன்னைக் கடிச்சிடும் சயால்."

"கடிக்க முடியாது" என்று சயால் தன் பற்களை நறநறவென்று கடித்தாள்.



nbt.india
एकः सूते सकलम्

“ஆ...என்னோட முழங்காலை முறிக்குதே...ஆ...”

“அலறாத நிர்மலா, அமைதியாய் இரு.”

நிர்மலா மென்று விழுங்கினாள். சயாலின் வெறிமுகத்தைப் பார்த்தாள். பொல்லாப் பாம்பைப் பிளந்து உயிர் குடிக்கப் போராடும் இரு சிறிய பழுப்புக்கரங்களின் பரிதவிப்பைப் பார்த்தாள். அதன் தொண்டைக்குள் பலவந்தமாய்க் கையைத் திணிக்கையில் அவள் தன் பற்களை நெரிப்பதைப் பார்த்தாள். அவளது நெற்றியில் வியர்வைத்துளிகள் அரும்பின. கையில் இரத்தம் சொட்டியது. ‘இரத்தம்! சயாலுடையதா? தன்னுடையதா?’

பாம்பு ஆக்ரோஷமாய்த் திமிறிற்று. அப்பப்பா! அதற்குத் தான் எவ்வளவு பலம்! சயால் அதை வெல்லமுடியாது. இருவரையுமே அது கொல்லப்போகிறது!

ஆனால் சடக்கென்று அதன் தாடைகள் அகன்றன.

“காலை வெளியே இழு...உதை, மிதி” என்று சயால் கத்தினாள். பலங்கொண்ட மட்டும் பாம்பின் தாடைகளை இறுகப்பற்றியவாறே நின்றாள்.

நிர்மலா கால்களை உதைத்துத் திமிறினாள். அந்தப் பாம்பைப் போலவே வளைந்து நெளிந்த கால்களை உதறி இழுத்தாள். காலைச்சுற்றிய கடுமையான பிடி கலகலத்தது. ஓங்கி ஒரு மிதி, ஒரே இழுப்பு – நிர்மலா வெளிப்பட்டாள். விடுதலை! விடுதலை! அவள் அப்பால் தாவிப் பாய்ந்தாள்.

ஆனால் அந்தப் புல்தரையில் இன்னுங் கோரமாய்ச் சண்டை மூண்டது.

“ஓடு” சயால் வறண்ட குரலில் கூவினாள், “நிர்மலா, தப்பிச்சுப்போ, ஓடு.”

ஓடுவதா? கூடாது. அவள் அங்கே இருந்து சயாலைக் காப்பாற்றவேண்டும். ஆனால், எப்படி? என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தாள் நிர்மலா. மலைப்பாம்பின் தலை தன்னை நெருங்காமல் தடுக்கத் தத்தளிக்கும் சயாலின் மெலிந்த தோள்களை அவள் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

பாம்பு குரூரமாய் சீறிற்று. அதன் தலை எழும்பிச் சயாலின்

nbt.india
एक: सूत्रे सकलम

நெஞ்சை நெருங்கிற்று. தாடைகளைப் பிளந்த தன் பிடியைச் சற்றும் தளர்த்தாமல் அவள் பின்னோக்கி வளைந்தாள். விலங்கின் மீது வைத்த விழிகளை விலக்காமலே, “ஓடு, தப்பிச்சுக்கோ நிர்மலா, ஓடு” என்று மீண்டும் கத்தினாள்.

“ஆனால் சயால்! நீ, நீ!” நிர்மலா பதறினாள். அச்சம் தலைக்கேறிற்று. சீற்றத்துடன் தாவிச் சயாலைத் தாக்கும் அந்தப் பேரரவைப் பார்த்துக்கொண்டே செயலற்று நின்றாள்.

“சயால்! ஐயோ, சயால்!”

“ஓடு, ஓடு! நிற்காதே!” சயாலின் சொற்கள் சோர்வாய் வெளிப்பட்டன.

வேறு கதியில்லை என்ற நிலையில் எங்கிருந்தோ உடம்பில் ஒரு புதுத்தெம்பு ஊறுவதுபோல, சயாலுக்கு ஒரு வேகம் உண்டாயிற்று. மூர்க்கத்தனமாய் அந்த முரட்டுப்பாம்பின் முகத்தை மோதித் தள்ளிவிட்டு ஒரே துள்ளலில் அதன் பிடிக்கு அகப்படாத தூரத்துக்குத் தாவினாள்.

“ஓடு, நிர்மலா, மாடு மேயற இடத்துக்கு ஓடு”

நிர்மலா ஓடினாள். திரும்பிப்பாராமல் ஓடினாள். பார்க்க நினைத்தாலும் அவளால் முடியாது. அப்படித் தலைதெறிக்க ஓடினாள்.

அடுத்த சில நிமிடங்களில் சயாலும் அவளுடன் சேர்ந்துகொண்டாள். கையால் அவளைத் தொட்டாள். இருவரும் சேர்ந்து ஓடினார்கள். புல்வெளிக்கு மறுபுறம் கால்நடைகள் அமைதியாய் மேயும் இடத்துக்கு வந்தபிறகுதான் ஓட்டம் நின்றது.

மூச்சிரைக்க, வியர்க்க விறுவிறுக்க நின்ற இருவரும் மௌனமாய் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். நிர்மலாவின் கண்கள் குளமாயின. உதடுகள் துடித்தன. “அழாதே நிர்மலா, அழாதே...” ஆதரவாய் அவளை அணைத்துச் சாந்தப்படுத்தினாள் சயால். “எல்லாம் சரியாயிரும்.”

“சயால், அந்தப் பாழாய்ப்போன பாம்பு... அது என்னைக் கொன்னிருக்கும்... நீ மட்டும்...”

nbt.india
एक: सूते सकलम्

“உஷ்... அதைப்பத்திப் பேசாதே. போனது போகட்டும்”

அப்போதுதான் முதன்முறையாகப் பார்ப்பதுபோல சயாலைப் பார்த்தாள் நிர்மலா.

“சயால்,” விசும்பலுடன் அழைத்தாள். “என் நெக்லஸை உனக்குத் தர விரும்பறேன்.”

“வேண்டாம் நிர்மலா...எதுக்கு இதெல்லாம்? எனக்கு ஒரு கஷ்டம் வந்தா நீயுந்தான் இப்படி உதவியிருப்பே இல்லையா!”

நிர்மலா தலைகுனிந்தாள். தோழியின் பாதங்களைப் பார்த்தாள். சற்றுப் பொறுத்து மெல்லச் சொன்னாள், “எனக்குத் தெரியாது. தெரியவே தெரியாது”

பிறகு நடுங்கும் விரல்களால் நெக்லஸைக் கழற்றி, “தயவு செய்து இதை நீ வாங்கிக்கணும்” என்று கெஞ்சும் குரலில் சொன்னாள்.

சயால் தன்னை விடச் சிறியவளான நிர்மலாவின் விழிகளை உற்றுப் பார்த்த வண்ணமிருந்தாள். மெல்ல அவள் முகத்தில் ஒரு புன்னகை தோன்றியது. “சரி, வாங்கிக்கிறேன்” என்று கனிவாகச் சொன்னாள்.

nbt.india
एकः सूते सकलम्

# மரணம் அழைத்த அந்த வினாடி

பள்ளிக்கூட மணி எப்போது அடிக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் கோவிந்தன். பள்ளிக்கூடம் அவனுக்குப் பிடிக்காது என்பதில்லை. மிகவும் பிடித்ததுதான். அதுவும் ஆங்கில ஆசிரியை திருமதி சித்ரலேகா என்றால் அவனுக்கு கொள்ளை பிரியம்.

தமிழ்நாட்டில் குருபர உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்புத் தலைவனாகவும் இருந்த அவனுக்குப் படிப்பில் ஆர்வம் அதிகம். ஊரைச் சுற்றி வந்து பல விஷயங்களை அறிந்துகொள்வதிலும் விருப்பமுள்ளவன். பதின்மூன்று வயதுப் பையனாகிய அவனுக்கு அவ்வூரின் பழமையான பல்லவர் காலத்து நடராஜர் கோவில் ஆவலூட்டியதில் ஆச்சரியமில்லை. அவனும் ரவியும் அன்றாடம் பள்ளி முடிந்ததும் அங்கே போவார்கள்.

“கோவிந்தன்...” திருமதி சித்ரலேகாவின் குரல் அவனை வகுப்பறைக்கு இழுத்து வந்தது. அவன் சிலிர்ப்புடன் நிமிர்ந்து அமர்ந்தான். சுருண்ட தன் தலைமுடியை நாணத்துடன் ஒதுக்கிக்கொண்டான். ஆசிரியையின் ஆழமான பார்வையைத் தாளமுடியாமல் தடுமாறினான்.

“எஸ், மேடம்.”

“இந்தப் பயிற்சிப் புத்தகங்களைக் கொண்டு போய் என்னோட வீட்டில வை. இன்னும் கொஞ்ச நேரத்தில் பள்ளிக்கூடம் விட்டிரும். அதனால இப்பவே நீ போகலாம்.”

“சரி, மேடம்.”

nbt.india
एक: सूते सकलम्

கோவிந்தன் தன் துணிப்பையைத் தூக்கிக்கொண்டான். ரவியைத் தாண்டி வாசலுக்குப் போகையில் அவனை இலேசாக இடித்து ஓரக்கண்ணால் ஜாடை காட்டிவிட்டுப் போனான்.

'ஜானகிராம் இனிப்புத்தேங்காய்க் கடை'யில் இருவரும் சந்திப்பது வழக்கம்.

ஆனால், 1979ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் தேதி, கோவிந்தனும் ரவியும் அப்படிச் சந்திக்கவில்லை.

புத்தகக்கட்டைக் கையில் சுமந்துகொண்டு வகுப்புக்கு வெளியே வந்த கோவிந்தன் சுற்றுமுற்றும் பார்த்தான். எதிரே, பள்ளி மைதானத்தை அடுத்து குருபர பள்ளி நெடுஞ்சாலை, நீர் பாய்ச்சிய வயல்களுக்கும் தென்னந்தோப்புகளுக்கும் நடுவே வளைந்து சென்றது. அவனுக்கு இடப்பக்கம் இரண்டு மைல் தள்ளி கூரையில் வைக்கோல் மூடிய கிராமத்துக் குடிசைகள் பிற்பகல் வெயிலின் வெளிச்சத்தில் குளித்துக் கொண்டிருந்தன. தூரத்தில், பனை மரங்கள், நெல் வயல்களுக்கிடையே தெரியும் நடராஜர் கோவிலின் சிதிலங்கள்.

பள்ளிக்கூடத்துக்கு முன்புறம், சாலையின் வலப்பக்கம் ஒரு டிரக் நின்றிருந்தது. அதன் பின்னாலிருந்து தள்ளாடும் கால்களுடன் தட்டுத் தடுமாறி ஒருவன் வந்து கொண்டிருந்தான்.

அதன் டிரைவரா அவன்? இல்லை. வயதான கிழவர். தலை விநோதமாய் ஆடிற்று. அண்ணாந்து நிலைகுத்திய பார்வை. கறுத்துப் பள்ளமாய்த் தெரியும் குழிக்கண்கள். வெறுங்கால்கள். இடுப்பில் அக்கறையில்லாமல் சுற்றி இறுக்கிய சாயம் போன நைந்த கைலி. கையில் ஒரு நீளக்குச்சியைப் பிடித்துத் தரையைத் தட்டியவாறே அவர் மெல்ல நகர்ந்தார். நடுங்கிக்கொண்டிருந்த வலக்கையில் ஒரு திருவோடு இருந்தது.

அவன் உள்ளத்தில் இரக்கம் சுரந்தது. கண் தெரியாத அந்த முதியவருக்கு காசு தரலாம் என்று கால் சட்டைப்பைகளில் துழாவிப் பார்த்தான். எதுவும் கிடைக்கவில்லை. அவருக்குக் கொடுக்க தன்னிடம் ஒன்றுமே இல்லையா? ஒருவேளை ஸ்கூல் பைக்குள் ஏதாவது இருக்குமோ என்று நினைத்தான்.

nbt.india
एकः सूते सकलम्


nbt.india
एकः सूते सकलम्



குனிந்து பைக்குள் கையைவிட்டுப் புத்தகங்களுக்கிடையே அவன் விரல்களால் அளைந்து கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று ஒரு மோட்டார் எஞ்சின் கிர்ரென்று உறுமுவது காதில் ஒலித்தது. நிமிர்ந்து பார்த்தான். நெடுஞ்சாலை காலியாய் இருந்தது. ஆனால் சற்றுத்தொலைவில் ஒரு லாரி பயங்கர வேகத்தில் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

"அதன் வேகம் ஏன் குறையல?" கோவிந்தன் திகைத்தான். 'பாதை வளைந்திருப்பதால இங்கே நிக்கற டிரக்கோ அதன் பின்னால நிக்கிற கிழவரோ அந்த டிரைவர் கண்ணுக்குத் தெரியாதே!'

"பெரியவரே, ஜாக்கிரதை. ஒரு லாரி வேகமா வருது" என்று உடனே அவன் ஓங்கிக் கத்தினான். பிறகுதான் தன் அசட்டுத்தனம் அவனுக்குப் புரிந்தது — 'கிழவரோ குருடர். அவர் எப்படி லாரியைப் பார்ப்பார்...?' அந்த முதியவருக்கும் பதற்றத்தில் எந்தப் பக்கம் திரும்புவதென்றே தெரியவில்லை.

அவர் அங்கேயே நின்று தலையை மட்டும் அங்குமிங்கும் அசைத்தார். முகத்தில் குழப்பம். கோவிந்தனின் குரல் வந்த திசையில் திரும்பினார். ஆனால் கோவிந்தனை அவரால் பார்க்க முடியாதே?

மேட்டிலிருந்து இறங்கி விரைந்த லாரியின் வேகம் வரவரக் கூடியதே தவிர குறையவில்லை. 'அடக்கடவுளே, நான் உடனே ஏதாவது செய்யணும்.'

கோவிந்தன் துணிப்பையையும் எட்டாம் வகுப்பின் முப்பத்தெட்டு நோட்டுக்களையும் கீழே போட்டான். கைகளை

வேகமாய் ஆட்டி உச்சக்குரலில், "நிறுத்து, நிறுத்து. ஆள் இருக்கு..." என்று கூச்சல் போட்டான்.

உலர்ந்த உதடுகள் மட்டும் ஏதோ சொல்ல வருவதுபோல் அசைய, சத்தமே எழும்பாமல் நிராதரவாய் நட்டநடுச்சாலையில் நிற்கும் அந்தக் கிழவரின் பக்கம் திரும்பி, "ஒடுங்க...ஒடுங்க..." என்று கத்தினான்.

ஆனால், கிழவர் ஓடமுடியாதவர் என்பது உடனே புத்தியில் உறைத்தது. யாராவது ஓடுவதானால் அது தானேதான் – கோவிந்தன்தான் என்று புரிந்தது. அதையும் கொஞ்சமும் தாமதிக்காமல் உடனே செய்யவேண்டும். கணம் தப்பினாலும் பிணம்தான்.

கோவிந்தன் முன்னோக்கித் தாவினான். தரையில் குதிகால் அழுந்த, பள்ளிக்கூட அங்கணத்தைத் தாண்டிச் சிட்டாய்ப் பறந்து சாலையின் விளிம்புக்கு வந்து நின்றான். கையை ஆட்டினான். கத்தினான். "நிறுத்து! வேகத்தைக் குறை!"

விரைந்து வரும் லாரியின் டிரைவர் தலையை ஆட்டினார். 'யார் இந்தக் கிராமத்துப் பயல்? வீட்டுக்குப்போக வண்டில இடம் கேட்கிறானா? என்ன செய்கிறான் இங்கே? சாலையத் தாண்டப் போகிறானா? அட, பாவிப்பயலே!...' அவர் பூம் பூம் என்று ஹாரனை ஒலித்து அதிவேகமாய் பிரேக்குகளை அழுத்தி மிதித்தார். 'வழுக்கிற்றோ, போயிற்று, கதை முடிந்துவிடும்...'

புயல்வேகத்தில் குறுக்கே பாய்ந்த கோவிந்தன், கிழவரைப் பிடித்துத் தள்ளிப் பின்னால் சாய்ந்தான். கிழவர் குழறினார். கோலும் ஓடும் சிதறி விழுந்தன. இருவரும் ஒன்றாய்த் தரையில் விழுந்தார்கள்.

விழுந்தபோதும் கிழவருக்கு அடிபடாமல் இருக்க வேண்டுமென்று கோவிந்தன் தன் கைகளைக் கிழவனின் தோளைச் சுற்றிப் போட்டுக்கொண்டு முழுச்சுமையையும் தன் மீதே தாங்கிக்கொண்டான். விமானமொன்று விபரீதமாகத் தரையிறங்கியதுபோல இருவரும் சாலையின் கரடுமுரடான பரப்பில் சரிந்தார்கள். கப்பிக்கற்கள் கோவிந்தனின் முழங்கால்களைப் பதம் பார்த்தன; தோலைச் சிராய்த்தன. வலி



nbt.india

பொறுக்காமல் துவண்டு அவன் கண்களை மூடிக்கொண்டான்.

லாரி கிறீச்சிட்டவாறே சிறுவனையும் கிழவரையும் மயிரிழையில் கடந்தது. ஏறக்குறைய இருபது அடி தூரத்துக்கு அப்பால் போய்ச் சடாரென்று நின்றது. “சாமி, ஆண்டவனே!” கிழவர் புலம்பினார், “இங்கே என்ன நடக்குது?”

கோவிந்தன் கஷ்டப்பட்டுக் கண்களைத் திறந்தான். கிழவரின் பார்வையற்ற விழிப் பள்ளங்கள் இரண்டையும் பார்த்தான். உடல் பதறிற்று. தன் குரலின் கீறல் தெரியாமலிருக்க எச்சிலை விழுங்கிக் கொண்டான். “நாம பத்திரமா இருக்கோம் தாத்தா. கவலைப்படாதீங்க” என்று இதமாய்ச் சொன்னான்.

கிழவர் இருமலுடன், “எனக்கு ஒண்ணுமே புரியலை... நான்... நான்... என் தடி எங்கே? கொண்டுவா அதை. தடி இல்லாட்டா நான் தொலைஞ்சேன்” என்று திணறினார்.

“தடியை நான் எடுத்து வர்றேன் தாத்தா. நீங்க எழுந்திருங்க” என்று அவரைத் தூக்கிவிட்டுத் தாங்கலாய் மெல்ல சாலையோரத்துக்குக் கூட்டிச்சென்றான் கோவிந்தன்.

அவன் முழங்காலில் சுரீரென்று வலி கிளம்பி விண் விண்ணென்று தெறித்தது. கையிலும் குடைச்சல் எடுத்தது. கன்னத்தின் வழியே இரத்தம் வடிந்தது. அதைப் புறங்கையால் துடைத்துக்கொண்டே கிழவரின் தடியை அவன் தேடினான்.

அப்போது லாரி டிரைவர் கோபத்துடன் தன்னை நோக்கி வருவதை அவன் கண்டான். நெற்றிவரை சாய்வாய்க் கவிழ்ந்திருந்த அவரது குல்லாய்க்குக் கீழே கண்களில் கோபம் கொந்தளித்தது. அவனுக்குப் புரியாத மொழியில் வாய்க்கு வந்தபடி ஏதோ இரைந்தார்.

டிரைவருக்கு ஏன் இவ்வளவு கோபம்? வயதான ஒரு மனிதரின் உயிரைக் காக்கவே தன்னால் முடிந்ததை அவன் செய்திருக்கிறான். கிழவர் பேரிலும் பிசகில்லை.

“கோபிக்காதீங்க” என்று கோவிந்தன் கிழவர் மேல் அடி விழாதிருக்க அவருக்கு முன்னால் பாதுகாப்பாக நின்றான். “நான் உங்களுக்கு விளக்கறேன்” என்றான் டிரைவரிடம்.

nbt.india
एकः सूते सकलम्


nbt.india
एक: सूत्रे सकलम्

அவர் அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவில்லை. கோவிந்தனை நெருங்கி, அவன் சட்டையைப் பிடித்து உலுக்கத்தொடங்கினார்.

"ஐயா," கோவிந்தன் கெஞ்சினான். "தயவு செஞ்சு நான் சொல்றதைக் கேளுங்க..." ஆனால் வேறு மொழி பேசும் அவருக்கு எப்படி விளக்குவது?

கோவிந்தன் எப்படியெல்லாமோ சைகைகள் காட்டி, அரைகுறை ஆங்கிலத்தில் "தி ஓல்ட் மேன்... பிளைண்ட்... நோ ஸீயிங்... நோ ஸீயிங் டிரக்" என்று டிரைவருக்குப் புரியவைக்க முயன்றான்.

அவர் மசியவில்லை. அடிப்பதற்குக் கையை ஓங்கினார். ஆனால் அடி விழவில்லை.

அதற்குள் திடீரென்று, "பிடி, அவனை விடாதே..." என்ற கூக்குரல்கள் எழுந்தன. தேனீக்கூட்டம் போல மாணவர்கள் சாரிசாரியாய்ச் சாலையில் ஓடிவந்து, "பிடி அவனை... கோவிந்தன் மேல் கை வைச்ச அந்த ஆளை விடாதே" என்று கூச்சலிட்டவாறே சூழ்ந்துகொண்டார்கள்.

திகைத்த டிரைவர் திரும்பிப் பார்த்தார். மீண்டும் கையை ஓங்கி, புரியாத பாஷையில் ஏதோ புலம்பினார்.

"மரியாதையா கோவிந்தனை விட்டிரு. இல்லைன்னா உன்னை உதைப்போம்" என்ற கூட்டம் கத்திற்று. "கோவிந்தா, பயப்படாதே. நாங்க இருக்கிறோம்..." என்று பிள்ளைகள் கூவினார்கள். "ஏய், கோவிந்தனை விடப் போறியா இல்லையா?" என்று ஓநாய்க்கூட்டம் போல டிரைவர் மீது பாய்ந்தார்கள்.

"நிறுத்துங்க" என்ற கட்டளைக்குரல் மட்டும் அப்போது கேட்டிராவிட்டால் அவர்கள் ஓட்டுநரைத் தரையில் பிடித்துத் தள்ளியிருப்பார்கள்.

"பசங்களா... என்ன காரியம் செய்றீங்க? ரோட்டிலேர்ந்து தள்ளிப் போங்க... இங்கே விபத்துக்கு இடம் தரவேண்டாம்... ஓரத்துக்குப் போங்க... என்ன காதில் விழுந்ததா?"

வேண்டா வெறுப்பாய் மாணவர்கள் கலைந்தார்கள். "இந்த

nbt.india
एकः सूते सकलम्

அயோக்கியனை ஜெயிலுக்கு அனுப்பணும்" என்று ஆவேசமாய்ச் சொல்லிக்கொண்டே நகர்ந்தார்கள்.

தலைமையாசிரியர் ஆணையிடுகிற மாதிரி கையை ஆட்டி கோவிந்தனையும் டிரைவரையும் ஓர் ஓரத்தில் நிற்கச் சொன்னார். திருமதி சித்ரலேகா அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனுக்குத் தேவையான உதவியைச் செய்துகொண்டிருந்தார்.

"ஸார்" கோவிந்தன் முந்திக்கொண்டு ஆரம்பித்தான். "என்ன நடந்தது தெரியுமா ஸார்... இந்தக் கிழவரைக் காப்பாத்தத்தான் ஸார் நான் அப்படிச் செய்தேன். ஆனா இந்த டிரைவர் ஏன் கோபிக்கிறார்னு புரியலை ஸார்."

"நடந்ததையெல்லாம் நான் பாத்தேம்ப்பா" என்று தலைமை யாசிரியர் அன்போடு கோவிந்தனின் தலையை வருடினார். "உண்மைல உன்னைப் பத்தி நான் ரொம்ப பெருமைப்படுறேன். ஒரு வினாடி நீ தாமதிச்சிருந்தாலும் அந்தக் கிழவர் செத்திருப்பார். உன் உயிரைப் பொருட்படுத்தாம நீ அவரைக் காப்பாத்தியிருக்கிற... கொஞ்சம் பொறு, இந்த டிரைவர்கிட்ட பேசறேன்" என்று திரும்பினார். அருகில் அந்த ஆள் ஆத்திரம் தணியாமல் விறைப்பாகவே நின்று கொண்டிருந்தார். "உனக்கு ஓரளவாவது ஆங்கிலம் தெரியுமா?" என்று தலைமையாசிரியர் நிதானமாய்க் கேட்டார்.

"கொஞ்சம் தெரியும். உங்கள் பள்ளிக்கூடப்பிள்ளைகள்..."

"இருக்கட்டும். நான் சொல்றதைக்கேள். கோவிந்தன் அப்படி ரோட்ல குறுக்க பாய்ந்ததுக்குக் காரணம்... ..."

மாணவர்கள் தலைமையாசிரியரின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனாலும் அவர்களின் கண்கள் அந்த டிரைவர் மீதே பதிந்திருந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் முகத்தில் ஒரு மாறுதல் தெரிந்தது. பிறகு அவர் கோவிந்தனைப் பார்த்து, "ஐ யாம் ஸாரி. ஐ யாம் வெரி ஸாரி" என்றார்.

## “நான் எரிந்து கொண்டிருக்கிறேன்!”

பாட்னா பொது மருத்துவமனை. தீவிர சிகிச்சைப் பிரிவில் ஒரு படுக்கை மீது குனிந்திருந்த பெண்மணியின் முகத்தில் கண்ணீர்த் துளிகள் உருண்டோடின. தன் மகளின் உடல் முழுவதும் போட்டிருந்த வெண்துணிக் கட்டுகளைப் பார்த்துக்கொண்டே அந்தப் பெண்மணி புலம்பினாள், “சோனியா, சோனியாக் கண்ணு!”

சோனியா சின்ஹா பதில் பேசவில்லை. அவள் அசையவும் இல்லை.

அவள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறாளா? அவள் இதயம் இன்னும் துடித்துக்கொண்டிருக்கிறதா?

“டாக்டர், என் குழந்தை இறந்து கொண்டிருக்கிறாளா?” என்று மருட்சியுடன் அந்தப் பெண்மணி கேட்டாள். “டாக்டர், நர்ஸ், தயவு செய்து என் மகளை எப்படியாவது காப்பாத்துங்க” அவள் பரிதாபமாய் வேண்டினாள்.

டாக்டர் அவளை ஆதரவாய் ஜன்னலருகே அழைத்துச் சென்றார். “என்னை நம்புங்கள் திருமதி சின்ஹா. எங்களால் முடிந்த அனைத்தையும் நாங்கள் செய்கிறோம்” என்றார்.

“எனக்குத் தெரியும் டாக்டர். ஆனாலும் மனசு கேட்கலை. கணவரைப் பறிகொடுத்துட்டேன். இப்போது இவளும் போய்ட்டா என்னால தாங்கமுடியாது டாக்டர். தயவு செஞ்சு என் மகளை எப்பாடு பட்டாவது பிழைக்க வைச்சிருங்க...”

“நாங்கள் முடிஞ்சதெல்லாம் மனப்பூர்வமா செய்றோம். ஆனால் அவளுக்கு ஏற்பட்டிருக்கிறதோ மூன்றாம் நிலை

தீக்காயங்கள். அவளோட தாங்கும் சக்தியையும், பிழைக்க வேண்டும் என்னும் மனவுறுதியையும் பொறுத்துத்தான் குணம் தெரியும்.”

“ஆனா அவள் இங்க கிட்டத்தட்ட மூணு வாரமா இருக்கிறாளே, டாக்டர்...”

“அவள் குணமடைய மூணு மாசமோ, அதுக்கு மேலோ கூட ஆகலாம்.”

“தெய்வமே...”

“அழாதீங்க சின்ஹா. சோனியா தைரியமான பெண். இல்லாட்டா அவ அப்படிச் செஞ்சிருக்க மாட்டா.”

* * *

தம்பியும் தங்கையும் தூக்கத்தில் சீராய் மூச்சுவிடும் சப்தம் சோனியா சின்ஹாவின் காதில் விழுந்தது. குட்டித்தம்பி ஷானத் இப்போதுதான் மழலை பேசக் கற்றுக் கொண்டிருக்கிறான். தங்கை ஷாலினிக்கு ஐந்து வயதாகிறது. அவள் தூங்கும்போது பார்க்க வேண்டும். மனசுக்கு இதமாய் இருக்கும். ஷாலினியின் சுருள் சுருளான இரவு உடை கலைந்து, முழுவேகத்தில் சுழன்ற மின்விசிறிப் பக்கமாய முதுகு திறந்திருந்தது.

‘குழந்தை முதுகை மூடுவோம்’ என்று எண்ணிய சோனியா சட்டென்று வேறு நினைப்பில் மூழ்கினாள். இவர்களையெல்லாம் பிரிந்து பாட்னாவில் தாத்தா பாட்டியிடம் தங்க வேண்டியிருப்பதை நினைத்தாள். அங்கே அவள் செயின்ட் ஜோஸஃப் கான்வென்டில் படித்துக்கொண்டிருந்தாள். பள்ளிக்கூடத்தையும் ஆசிரியைகளையும் அவள் மிகவும் நேசித்தாள். ஆனாலும் பீகாரில் இந்த ‘அறாக்’ ஊரிலேயே தாய் தந்தை தம்பி தங்கைகளுடன் இருந்து, பள்ளிக்கூடம் போய் வந்தால் எவ்வளவு இனிமையாய் இருக்கும் என்றும் அவளுக்குத் தோன்றியது. அவள் அப்பா இங்கே அரசாங்க ஆஸ்பத்திரியில் குழந்தை வைத்திய நிபுணராக இருக்கிறார். ஆனால் அவர் “என்

nbt.india

குழந்தைகளுக்கு வாழ்க்கையில் நல்ல வாய்ப்புகள் எல்லாம் கிடைக்கிற மாதிரி சிறந்த கல்வியையே தர விரும்புகிறேன்...” என்று சொல்லியிருந்தார்.

‘வாழ்க்கையில் நல்ல வாய்ப்புகள்’ என்ற வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம் என்று அவளுக்கு விளங்கவில்லை. ஆனால் தன் நலனில் அப்பா அம்மாவுக்கு உள்ள அக்கறை அவளுக்கு நன்றாகப் புரிந்தது.

ஆகவேதான் அவர்கள் சொல்லைத் தட்டாமல் பாட்னா போய் படித்தாள். விடுமுறை நாட்களிலும் விசேஷ தினங்களிலும் மட்டும் இங்கே வந்து தங்கிவிட்டுப் போவாள். அப்படித்தான் தனது பதினொன்றாவது பிறந்தநாளைக் கொண்டாட அவள் இங்கே வந்திருந்தாள்.

நேற்று வீட்டில் ஒரே கோலாகலம்! நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்தார்கள். அவள் புது கவுன் போட்டுக்கொண்டிருந்தாள். வெள்ளை லேஸ் வைத்துத் தைத்த வெளிர் நீல கவுன் மிக அழகாய் இருந்தது. கருப்புத் தலைமயிரில் வெள்ளை ரிப்பன் கட்டியிருந்தாள். பிறந்தநாள் சாக்லேட் கேக் பிரமாதமாயிருந்தது. அதைச் சுற்றிலும் பதினோரு மெழுகுவர்த்திகள். அவற்றின் ஒளியில் அவளுடைய அழகிய பெரிய பழுப்புக் கண்கள் மின்னின. ஆகா! எவ்வளவு குதூகலமான நாள் அது! அம்மா, அப்பா, தங்கை, தம்பி உடனிருக்க, பதினொன்றாம் பிறந்தநாளைக் கொண்டாடியதில் எவ்வளவு இன்பம்!

ஷாலினி அசைந்தாள். சோனியாவின் நினைவலை கலைந்தது. மெதுவாய் அவள் தன் படுக்கையிலிருந்து இறங்கித் தங்கையின் அருகில் போய் இரவு உடையைச் சரியாய் இழுத்து விட்டாள்.

பக்கத்து அறையின் சாப்பாட்டு மேஜையில் அப்பாவும் அம்மாவும் உணவை அருந்தியவாறே பேசிக்கொள்ளும் ஒலி கேட்டது.

“சமையல் காஸ் சிலிண்டரில் என்ன கோளாறுன்னு கொஞ்சம்

nbt.india एकः सूते सकलम्

பாருங்க ஆனந்த், அதன் வால்வு அழுத்தமாய் இறுகியிருக்குது. என்னால் திறக்கவே முடியலை...”

“சாப்பிட்டதும் உடனே அதைக் கவனிக்கிறேன்.”

“நீங்களே அதைச் சரிபண்ணிருங்க... வெயில் காலத்தில் மண்ணெண்ணெய் ஸ்டவ்வோடு மன்றாடுறது ரொம்பக் கஷ்டம். அடடே, ஸ்டவ்வில் வெந்நீர் கொதிக்குது. அதை எடுக்கணும்”

சோனியாவுக்குப் பெற்றோரிடம் போகவேண்டும் போலிருந்தது. ஆனால், இரவு இவ்வளவு நேரம் அவள் விழித்திருப்பது அப்பாவுக்குப் பிடிக்காது என்று அவளுக்குத் தெரியும். ஆகவே அவள் மீண்டும் மெல்லப் படுக்கையிலேறிப் படுத்துக்கொண்டாள். பிறந்தநாள் பரிசுகளை மனசுக்குள் அசைபோட்டு அவள் ஆறு எண்ணுவதற்குள்ளேயே அசந்து தூங்கிப்போனாள்.

* * *

“ஆ...”

சத்தம் கேட்டு சோனியா சட்டென்று விழித்துக்கொண்டாள்.

‘என்ன சத்தம்? யாராவது அலறினார்களா? ஷானத்தா? ஷாலினியா?’ பக்கத்தில் பார்வையைச் செலுத்தினாள். சலனமின்றித் தூங்கும் குழந்தைகளின் நிர்மலமான முகங்களைப் பார்த்து நிம்மதிப் பெருமூச்செறிந்தாள். ‘ஏதாவது கெட்ட கனவாயிருக்கும்...’ இதயம் இன்னும் படபடவென அடித்துக்கொண்டிருந்தது. ‘சரி தூங்கலாம்’ என்று அவள் திரும்பிப் படுத்தாள். அப்போது மறுபடியும் அலறல் கேட்டது. ஆம்! அது அம்மாவின் குரல்தான்!

“ஆனந்த், வால்வு எப்படியோ போகட்டும். நீங்க வெளியே வாங்க. காஸ் பற்றி எரியுது. தீ...! தீ...! ஆனந்த், வந்திருங்க...”

“இல்லை, மாயா, அதைக் கட்டாயம் மூடணும்” தந்தையின் குரல் தளர்ந்து ஒலித்தது.

nbt.india एकः सूते सकलम्

“அய்யோ! உங்கள் மேல் தீ... வந்திருங்க ஆனந்த்...”

திடீரென்று அவரும் வேதனை தாளாமல் அலறினார். “மாயா, ஓடு, உன்னைக் காப்பாத்திக்கோ. ஓடு! குழந்தைகள்... அவங்களைக் கவனி. ஆ.... தீ... தகிக்குதே... கடவுளே...”

சோனியா படுக்கையிலிருந்து குதித்தாள். “அப்பா...அப்பா...” மின்னல் வேகத்தில் சாப்பாட்டு அறைக்குள் வந்துவிட்டாள்.

சமையலறைக்குச் சற்றுத் தள்ளி நடுக்கத்துடன் அலறிக் கொண்டிருந்த அம்மா தன் கணவரை வெளியே வரவழைக்கப் பிரயத்தனம் செய்வதை சோனியா பார்த்தாள். தட்டுத் தடுமாறி கதவைத் தள்ளிக்கொண்டு ஆசுவாசத்துடன் வெளியில் தாவிய அப்பா அப்படியே அம்மாவின் கைகளில் சாய்ந்ததைக் கண்டாள். ஆஜானுபாகுவான அவரது உடல் கனம் தாங்காமல் அம்மா நிலைகுலைந்தாள்.

பதறிப் பக்கத்தில் ஓடிய சோனியாவின் முகத்தில் சமையலறைத் தீச்சுவாலையின் சூடு தெரிந்தது. காஸ் சிலிண்டர் திகுதிகுவென்று கொழுந்துவிட்டு எரிந்தது. எந்த நிமிஷமும் அது வெடித்துவிடும்! “காத்து, காத்து, நமக்குக் காத்து வேணும், அம்மா, தள்ளிப்போ...” என்று அவள் கத்தினாள்.

பேயறைந்தமாதிரி திகிலுடன் இருந்த அம்மா, “அய்யோ ஆனந்த்! ஆனந்த்! அப்பாவுக்கு மூச்சுப் பேச்சில்லையடி!” என்ற அரற்றினாளே தவிர அவளால் வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை.

சோனியா முன்னால் தாவிப்போய், தந்தையின் தோளைப் பிடித்து இழுத்தாள். சதை பொசுங்கிய நெடி அவள் நாசியில் ஏறிற்று. அவளுக்கு வயிற்றைக் குமட்டியது. குனிந்து அப்பாவைப் பார்த்ததும் அப்படியே ஆடிப்போனாள். அவர் முகம் முழுக்கவுமே தணல் துண்டம் மாதிரி தெரிந்தது. கழுத்துத் தோலும் தீச்சிவப்பாய்க் கனன்றிருந்தது. “அப்பா...”

“இழு... அம்மா... இழு...” என்று அலறிக்கொண்டே அவள் சமையலறை வாசலிலிருந்து தந்தையின் சரீரத்தைப் பிடித்து இழுக்க முயன்றாள். இருவருமாய் முக்கி முனகி

nbt.india
एकः सूते सकलम्

இழுத்துக்கொண்டே சாப்பாட்டு அறைக்கு வந்தார்கள். “உடனே இங்கிருந்தும் வெளியேறணும்...”

சோனியாவுக்கும் அவள் தாய்க்கும் மேல் மூச்சு வாங்கிற்று. வெப்பக்காற்று அவர்களின் கண்களை மேலும் கலக்கிற்று. நெஞ்சுக்குள் நுழைந்து அழுத்திற்று. அசைவற்ற உடலைத் தூக்க முடியாமல் சிரமப்பட்டுத் தூக்கி நிமிர்த்தித் தங்கள் முதுகில் சாய்த்து இழுத்தவாறே இருவரும் நகர்ந்து கதவைத் தள்ளித் திறந்து கொண்டு, படிக்கட்டுகளில் இறக்கி வெளிவாசல் வழியாய் முன்புறப் புல் மைதானத்துக்குக் கொண்டு வந்து கிடத்தினார்கள். அப்படியே அவர்களும் புல்தரையில் கிறுகிறுத்து விழுந்து விட்டார்கள்.

“சின்ஹா மேடம், என்ன நடந்துச்சு...?”

சோனியா தலை நிமிர்ந்து பார்த்தாள். பக்கத்துவீட்டு முதிய தம்பதியின் பரிவு முகங்கள் தெரிந்தன.

“அடக்கடவுளே!” என்றார்கள் பக்கத்தில் நெருங்கிப் பார்த்த பெரியவர்கள் இருவரும்.

“டாக்டர் சின்ஹாவுக்கு என்ன ஆச்சு?” என்று பதற்றத்துடன் கேட்டார்கள்.

“காஸ்...” விசும்பினாள் திருமதி சின்ஹா. “காஸ்...என் கணவரை...” குரல் கம்மிற்று.

“ஆனந்த்...ஆனந்த்...” என்று தன் கணவரின் உயிரற்ற உடல் மேல் விழுந்து அவள் அரற்றினாள்.

“உடனே இப்போ உதவி தேவை...” என்றார் மூதாட்டி. “விநோத், சீக்கிரம் போய் ஆம்புலன்சுக்கு ஃபோன் பண்ணுங்க. நான் இங்க இவர்களுக்குத் துணையா இருக்கிறேன்”

பெரியவர் அவசரமாய் வீதிக்கு விரைந்தார். அவர் துணைவி, திருமதி சின்ஹாவுக்கு அருகில் அமர்ந்து ஆறுதல் கூறித் தேற்றலானார்.

சட்டென்று சோனியாவுக்குத் தம்பி தங்கையின் ஞாபகம் வந்தது. அவள் பதறி எழுந்தாள். “ஷாலினி...ஷானத்...” என்று வீறிட்டவாறே விரைந்தாள். “சோனியா, இரு, போகாத...” என்ற

nbt.india
एकः सूते सकलम्

மூதாட்டியின் குரல் அவள் காதில் விழுந்தது. ஆனாலும் அதற்குள் அவள் வீட்டு முன்வாசலை அடைந்துவிட்டாள். கதவை இடித்துத் திறந்தாள். உள்ளே இரும்பைக் காய்ச்சுவது போல அனல் அடித்தது. சிலிண்டரிலிருந்து பொங்கிப் பரவியிருந்த நெருப்பு, காற்றோட்டமில்லாத சமையலறையைக் காளவாய் ஆக்கியிருப்பது தெரிந்தது. குபுகுபுவென்று தீ நாக்குகள் எல்லாப் பக்கங்களிலும் சுழன்றன.

பிரமிட் மாதிரி அடுக்கியிருந்த பீங்கான் பாண்டங்கள் அதிர்ச்சி தரும் பெருத்த சப்தத்துடன் தரையில் விழுந்து நொறுங்கின. தடாரென்று ஜன்னல் பெயர்ந்து தொட்டியில் சரிந்த இடிமுழக்கத்தில், படுக்கை அறையிலிருந்து வந்த பரிதாபக் கூக்குரல்கள் மங்கின. ‘ஷாலினி! ஷானத்! அவங்களும் எரிஞ்சிட்டிருக்காங்களோ...’

காற்றை நிறைய உள்ளுக்கிழுத்து நெஞ்சில் தேக்கிக் கொண்டு சோனியா உள்ளே பாய்ந்தாள். முன்னறையைத் தாண்டி சாப்பாட்டு அறைக்கு வந்தாள்.

அங்கே அவள் கண்ட காட்சி – கொள்ளிவாய்ப் பிசாசின் தலைவிரிகோலம்!

மரச்சாமான்கள் எரிந்து கருகி வெடித்துச் சிதறிக்கிடந்தன. அலமாரிக் கதவுகள் வாய் பிளந்து இரும்பு மரைகளில் தொங்கின. உள்ளிருந்த பொருள்கள் உடைந்து தரையில் உருண்டு புகைந்தன.

அவள் உடலெங்கும் அனல் தாக்கிற்று. புருவமயிர்கள் விறைத்துக் கரிந்து உதிர்ந்தன. அவள் கலவரமடைந்தாள். மயக்கம் வருவது போலிருந்தது. ‘இனியும் தாமதிச்சா உனக்கே ஆபத்துத்தான். போயிரு, திரும்பி ஓடு’ என்று அவள் மனக்குரல் எச்சரித்தது. ஆனால் மூளைக்குள் சம்மட்டித் தாக்குதல் போல இன்னொரு குரல் உள்ளுணர்வாய் ஒலித்தது. ‘உன் தங்கையைக் காப்பாற்று! உன் தம்பியைக் காப்பாற்று!’

சோனியா தடுமாற்றத்துடன் முன்னோக்கிப் போனாள். கதவைத் திறந்துகொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

nbt.india
एक: सूते सकलम्



nbt.india
एकः सूते सकलम्



nbt.india
एकः सूते सकलम्

அவளுக்கு மூச்சு வாங்கிற்று. ஆனாலும் தங்கையை இடுப்பில் அணைத்துக்கொண்டாள். தம்பியை மார்போடு சேர்த்து அழுத்திப் பிடித்துக்கொண்டாள். நடக்கலானாள். "சோனியா! அம்மா! அப்பா!" என்று குழந்தை தேம்பினாள். "உஷ்...ஷாலினி... உஷ்...ஷானத்" என்று முனகி அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றாள். உதறல் கண்ட குழந்தைகளுக்கு உற்சாகமூட்டுகிற மாதிரி அவர்களைப் பார்த்து முறுவலிக்க முயன்றாள்.

அப்போதுதான் அவள் தன் கைகளையே பார்த்தாள். கைதானா அல்லது கொப்புளித்த சதைப்பிண்டமா? உள்ளூறக் குலைநடுக்கம் கண்டு உடலெங்கும் பரவியது. கால்கள் ஒத்துழைக்க மறுத்தன.

'இனி என்னால் ஒரு எட்டுக்கூட எடுத்து வைக்க முடியாது. மூணு பேருமே சாகவேண்டியதுதான்...' என்ற எண்ணம் எழுந்தது. ஆனால் மீண்டும் அந்த உட்குரல், "சோனியா, சோர்ந்துவிடாதே... உம்... நட... உன்னால் முடியும்" என்றது.

சோனியா நகர்ந்தாள். தம்பியையும் தங்கையையும் தூக்கிக்கொண்டு மெதுவாக மரக்கால்களால் நடப்பதுபோல, தட்டுத்தடுமாறி முன்னேறினாள். தங்கை தம்பியின் பாரம் அழுத்திற்று. இருந்தாலும் ஓர் உத்வேகத்துடன் தன் சக்தியைத் திரட்டிக்கொண்டு ஓடத்தொடங்கினாள். அறையை விட்டு ஒரே பாய்ச்லில் வெளிவந்தாள். அவளுக்குப் பின்னால் மரத்தட்டுமாடம் ஒன்று மடாரென்று தரையில் சரிந்து விழுவது கேட்டது. மூச்சை அடக்கிய அழுத்தத்தில் நுரையீரல்கள் வெடித்துவிடும் போலிருந்தன. கால்கள் ஈயக்குண்டுகளாய்க் கனத்தன. 'முடியாது... வாசல் வரை போகமுடியுமா... சந்தேகந்தான்...'

'முடியும் சோனியா, உன்னால் முடியும்' என்ற உட்குரல் சொல்லிற்று. அவள் பற்களை இறுக்கிக் கடித்துக்கொண்டு முழுமூச்சுடன் தன் தேகத்தைச் செலுத்தினாள்.

வாசலை எட்டிப்பிடித்தாயிற்று. கதவை மோதித் திறந்தாள். தலையை நிமிர்த்தாமலேயே படிகளில் தாறுமாறாய்த் தாவி



nbt.india
एक सूते सकलम्

இறங்கினாள். அப்புறந்தான் அவள் வலி தாளாமல் கூவினாள். "அய்யோ அம்மா! நான் எரிந்து கொண்டிருக்கிறேன்! என் உடம்பெல்லாம் எரியுது..."

அவ்வளவுதான். கால்கள் தொய்ந்தன. கண்கள் இருண்டன. தலை கிறுகிறுத்தது. ஒரே இருட்டு. அவள் விழுந்து விட்டாள். நினைவு தப்பிற்று.

* * *

திரும்ப அவள் கண் திறந்தபோது ஆஸ்பத்திரிப் படுக்கையில் கிடந்தாள்.

"நீ எதுவும் பேசவேண்டாம்" கனிவாய் அவள் கண்களையே பார்த்துக்கொண்டிருந்த டாக்டர் சொன்னார், "நீ நல்லா இருக்கிற..."

"எங்கே என் அம்மா? என் அப்பா? ஷாலினி, ஷானத்?"

"உன் அம்மா, தம்பி, தங்கை மூணுபேரும் நல்லா இருக்காங்க"

"ஆனால்... நா ஏன் இங்கே இருக்கேன்? என் உடம்பெல்லாம் இதென்ன கட்டு? ஆ...வலிக்குதே... என் முகம்..."

"உனக்கு உடம்பு சுகமில்லாம போயிருச்சு..." பரிவுடன் டாக்டர் சொன்னார். "உன் முகம் கழுத்து கைகால் எல்லாம் புண்ணாயிருச்சு. ஆனால் உள்ளுக்குள்ள நீ அப்படியேதான் இருக்கிற. நீ துணிச்சலான பெண். சமர்த்து... கெட்டிக்காரி. அதனால்தான் உன் தம்பியையும் தங்கையையும் நீ காப்பாத்திட்ட... உன் உடம்பில் கொஞ்சம் வடுக்கள், தழும்புகள். அதனால் என்ன? அதற்காக நீ பயப்பட மாட்டாய். இல்லையா சோனியா?"

சோனியா டாக்டரைப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் தளும்பிற்று. நீண்டநேரம் கழித்து அவள் மெல்லச் சொன்னாள், "இல்லை. டாக்டர், நான் பயப்பட மாட்டேன்..."

nbt.india
एक सूत्रं सकलम्

# இரவில் ஒரு பிசாசு ரயில்

சத்ருக்னாவின் ஆழ்ந்த பழுப்புக் கண்கள் பரபரப்பில் அகல விரிந்தன. அவன் கைகொட்டித் துள்ளினான். "பக்கத்து ஊரில் பாரதமா? ஹை! நாடகம் பார்க்க எனக்கு ரொம்ப ஆசை. ஒருநாள் நானும் மகாபாரதத்தில் அர்ஜுனன் வேஷம் போடப்போறேன்" என்றான். உடனே நெஞ்சை நிமிர்த்தி, "கிருஷ்ணா, என்றும் மாறாதவனே! என் ரதத்தை எடு. போருக்குத் துணிந்த வீரர்கள் எங்கே தங்கள் எதிரிகளைச் சந்திக்கிறார்களோ, அங்கே அதைக் கொண்டுபோ" என்று வசனம் பேசினான்.

பெண்மணிகள் புடவைத்தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டே, களுக்கென்று சிரித்தார்கள். குழந்தைகளிடையே கொல்லென்ற சிரிப்பொலி எழுந்தது. சத்ருக்னாவைப் போலவே நையாண்டி செய்து காட்டினர். "கிருஷ்ணா, என்றும் மாறாதவனே! என் ரதத்தை எடு...!"

சத்ருக்னாவுக்கு பன்னிரண்டு வயது. அனாதைப்பையன். தாய் தந்தையை இழந்த அவன் சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கே தன் மாமாவுடன் தங்க வந்துவிட்டான். கேலாபாரி கிராமத்து மக்கள் எல்லோருமே அந்த சோனிப்பையனை மிகவும் நேசித்தார்கள். அவன் யாருக்கும் எப்போதும் எந்த உதவியும் செய்யத் தயாராய் இருப்பவன். அத்துடன் வேடிக்கை, குறும்பு, கூத்து இவற்றுக்கெல்லாம் முன்னணியில் நிற்பான்.

"அதுசரி சத்ருக்னா..." சீதன் தேவி ஆரம்பித்தாள். பெண்களிடையே பெரியவள் அவள்தான். தனக்குள்ளேயே இன்னமும் கிளுகிளுத்துக்கொண்டு, "நாங்க நாடகம் பார்க்க

உன்னையும் எங்களோட கூட்டிட்டுப் போறோம். சாயந்திரம் சீக்கிரமா கிளம்பிருவோம்" என்று சொன்னாள்.

சத்ருக்னாவுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. அவன் குதித்துக்கொண்டே தெருவில் இறங்கி மாமாவின் குடிசைக்கு ஓட்டம் பிடித்தான்.

விசிலடித்துக்கொண்டும் சத்தம் போட்டுப் பாடிக்கொண்டும் அவன் குளித்தான். உடைமாற்றிக்கொண்டான். இருட்டாய்ப் புகை படிந்த சமையற்கட்டின் தரையில் பித்தளைத் தட்டுக்கெதிரே சம்மணம் போட்டு உட்கார்ந்து சாப்பாட்டை அள்ளி அள்ளி வாயில் போட்டுக்கொண்டான்.

"மெள்ள சாப்பிடேன் சத்ருக்னா, மெள்ள..." அத்தை சொன்னாள்.

ஆனால் மெள்ளச் சாப்பிடுவது அவனுக்குக் கஷ்டமான காரியம். அதுவும் தனக்கு மிக விருப்பமான பட்டாணி கலந்த சோற்றை மெதுவாய் உண்பதோ சுத்தமாய் முடியாது. விரல் நுனிகளை நக்கி உதட்டைச் சப்புக்கொட்டி, "அத்தை, சாப்பாடு பிரமாதம். நிறைய சாப்பிட்டுட்டேன்..." என்றான்.

"உன் வழக்கமே அதுதான்" என்று சிரித்தாள் அத்தை.

"ஆனால் இன்றைக்கு இவ்வளவு சாப்பிட்டது தேவைதான் அத்தை. நாங்க 'பாட்டா' கிராமத்திலே பாரதக்கூத்துப் பாக்கப் போறோமே, பசிக்காமல் இருக்கணும்ல... சாயந்திரம் போய்ட்டு காலையிலே திரும்பி வந்துருவோம். சீதன் தேவிதான் எங்களைக் கூட்டிட்டு போறாங்க."

"சரி சத்ருக்னா, பத்திரமாய்ப் போய்ட்டு வா. விஷமம் பண்ணாமல் சமர்த்தாய் நடந்துகொள். தெரிந்ததா?"

"சரி அத்தை, ஒழுங்காயிருப்பேன்" என்றவன் நமுட்டுச் சிரிப்புடன், "வழக்கம்போல..." என்ற சொல்லிவிட்டுச் சிட்டாய்ப் பறந்தான். அவன் அத்தை தலையை அசைத்துப் பாசத்துடன் அவனையே பார்த்துக்கொண்டு பெருமூச்சு விட்டாள்.

அந்தி நேரம். நான்கு பெண்மணிகளும் ஆறு குழந்தைகளும் மெல்ல ஆடி அசைந்து ஒருவழியாய்ப் புறப்பட்டுப்போனார்கள்.

nbt.india
एक: सूत्रे सकलम्



nbt.india
एकः सूते सकलम्

குறுகலான பாதையின் இருமருங்கிலும் புள்ளிக்கோலம் போல கட்டாந்தரையில் ஆங்காங்கே புதர்கள் மண்டிக்கிடந்தன. நவம்பர் மாதத்துக் குளிர் காற்றில் அவர்களுடைய மூக்குகள் மரத்துப்போயின.

“குளிர்காலம் தொடங்கிருச்சு” என்றாள் சீதன்தேவி. மற்ற பெண்மணிகள் அதை ஆமோதித்தவாறே சால்வைகளைத் தோள்களைச் சுற்றி இறுக்கமாய் இழுத்துவிட்டுக்கொண்டார்கள்.

நிர்மல் என்ற சிறுமியின் கையைப் பிடித்துக்கொண்டு சத்ருக்னா இலேசாய்ச் சீழ்க்கையடித்தவாறே நடந்தான்.

பிலாயிலிருந்து வரும் ரயில் பாதை வழியில் எதிர்ப்பட்டது. “இந்த ரயில்பாதை மீதே நாம் நடந்து போகலாம். அப்பத்தான் ஃபுலிஜிட் கால்வாய்ப்பாலத்தைக் கடப்பது சுலபம்” என்றாள் சீதன்தேவி.

“அது ஆபத்தில்லையா?” என்று கேட்டான் சத்ருக்னா.

“சாலைலே போறதைவிட இது இன்னும் பத்திரமானது. இந்தச் சமயத்தில் ரயில்கூட எதுவும் வராது. வாங்க வேகமாய். தாமதிக்கக்கூடாது.”

பெண்களும் குழந்தைகளும் இருப்புப்பாதை மீது ஏற, சத்ருக்னா ஒத்தாசை செய்தான். பிறகு நிர்மலின் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு மற்றவர்களுக்கு வழி காட்டு கிறவன் போல முன்னால் நடந்தான். தடித்த போர்வையாய் இரவின் இருட்டு கனத்தது. பாதை சரியாய்ப் புலப்படவில்லை. உத்தேசமாய்க் கால் வைத்துக்கொண்டே அவர்கள் நடந்தார்கள்.

ஆனால், சிறிது நேரம் கண்கள் பழகிய பிறகு தண்டவாளங்களின் குறுக்குக்கட்டைகள் மேல் நடப்பது சத்ருக்னாவுக்கு எளிதாயிற்று.

“மெதுவாய் நட அம்மா, என்னால் உன் வேகத்துக்கு ஓடிவர முடியலை” என்று ஒரு சிறுவன் பின்னாலிருந்து கத்துவது அவனுக்குக் கேட்டது. சீதன்தேவியின் கையிலிருந்த குழந்தை பப்லியும் சிணுங்க ஆரம்பித்தாள்.

nbt.india

"உஷ்..." சீதன்தேவி தன் குழந்தையைச் சமாதானப் படுத்தினாள். "அழக்கூடாது. இதோ இப்ப போய்ச் சேந்துருவோம். உனக்குச் சகுந்தலை கதை தெரியுமோ?"

"எனக்குத் தெரியுமே" சத்ருக்னா பீற்றிக்கொண்டான். "நூறு தரம் இதே கதையை நான் கேட்டாச்சு"

"சரிடா" என்ற சீதன்தேவி பொறுமையிழக்காமல் மீண்டும் ஆரம்பித்தாள்.

"யாருக்கெல்லாம் தெரியாதோ, யார் நூறு தடவைக்கும் மேல் கேட்டிருக்கிறாங்களோ எல்லாருக்கும் சேர்த்துத்தான் இந்தக்கதை" என்று பீடிகை போட்டாள்.

சத்ருக்னா சூள் கொட்டினான். ஆனாலும் கதையை ஆவலோடு கேட்டான். சகுந்தலை துஷ்யந்தன் வாழ்க்கையின் இன்ப துன்பங்களையெல்லாம் அவள் நீட்டி முழக்கிச் சொன்ன மும்முரத்தில் அவர்கள் எல்லோருமே மெய்மறந்தார்கள். காலமும் இடமும் மறந்து லயிப்புடன் கேட்டார்கள்.

சீதன்தேவியின் குரலைத் தவிர அந்த அத்துவானத்தில் நிசப்தம் நிலவியது. ஆனால் சத்ருக்னாவுக்கு மட்டும் என்னவோ சந்தேகம் தட்டிற்று. 'தண்டவாளம் இலேசாய்க் கடகடக்கிற மாதிரி இருக்குதே...' அவன் சட்டென்று நின்றான். புருவங்களை உயர்த்தி எதிரே இருளைக் கிழித்துத் தன் பார்வையைக் கூர்மையாக்க முயன்றான். உடனே மற்றவர்கள் பக்கம் திரும்பி, "உஷ்... வண்டி வருது போலருக்குதே..." என்று எச்சரித்தான்.

"ரயில், ரயில்" என்று குழந்தைகள் பயந்து அலறினார்கள்.

"சே...உளறாத... இந்த நேரத்தில் எந்த வண்டியும் இந்த வழியில வந்ததில்லை. வரவும் வராது. சத்ருக்னா, ஒழுங்காய் இருக்கப் போறயா இல்லையா? ஏன் அனாவசியமா குழந்தைகளை பயமுறுத்தறே? எப்பவும் ஏதாவது குறுக்க பேசி என்னைத் தொந்தரவு செய்றதே உனக்குத் வேலையாப் போச்சு. சரி...கதையை எந்த இடத்தில் விட்டேன்... வந்து...வந்து...ஆங்... சகுந்தலா அழுதாள்...அப்புறம்..."

சத்ருக்னா தோள்களைக் குலுக்கிக்கொண்டான். சீதன்தேவி

nbt.india
एक: सूते सकलम

சொல்வது சரிதானோ? இரவு எட்டு மணிவாக்கில் எந்த ரயிலும் இந்தப் பாதையில் ஓடி அவனும்தான் கேட்டதில்லை.

சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் ஃபுலிஜிட் கால்வாயின் குறுகலான பாலத்தை அடைந்தார்கள். பாலத்தின் இருபுறமும் இருந்த இரும்புத்தூண்களின் வரிசை வழியே திடீரென்று ஒரு பெருங்காற்று வேகமாய் வீசி ஓலமிட்டது. அவர்களின் தலைமயிரை அலைக்கழித்து முகத்தில் சில்லென்று அறைந்தது. “எல்லாரும் சேர்ந்தாற்போல் வாங்க” என்று சீதன் தேவி குரல் கொடுத்தாள். ஆனால் ஊதற்காற்று அவள் வார்த்தைகளை அடித்துக்கொண்டு போயிற்று. நிர்மல் நடுங்கி சத்ருக்னாவின் கையை இன்னும் இறுகப் பற்றிக்கொண்டாள்.

“சீக்கிரம், சீக்கிரம்” என்று துரிதப்படுத்தினார்கள் பெண்கள். அவர்களைப் பாலத்தின் மீது அழைத்துச் செல்கையில் எல்லாருடைய பாதங்களும் ஒரே சீராகச் சப்தித்தன. வேகவேகமாய் நடந்தார்கள். சத்ருக்னா முன்னால் போனான். பாலத்தைப் பாதி கடந்ததும் தண்டவாளங்களில் இன்னொரு கிடுகிடுப்பு தெரிந்தது.

“பாலமே ஆடுது!” என்று ஒருத்தி கத்தினாள்.

“அம்மா, பாலம் உடையுது” என்று ஒரு சிறுமி மிரண்டு அலறினாள்.

“உளறாதீங்க” என்று காற்றையும் மீறிக் கத்தினாள் சீதன்தேவி. “வெறும் காற்று... காற்றின் வேகந்தான் இது. நடையை எட்டிப்போடுங்க”

சத்ருக்னா காதுகளைத் தீட்டிக்கொண்டு உற்றுக் கவனித்தான். ‘பின்னாலிருந்து ரயில் வருகிறமாதிரி சத்தம் கேட்கல? அல்லது முன்னாலிருந்துதான் சத்தம் வருதா?’

இருளில் கூர்ந்து பார்த்தான். ஒன்றும் புலப்படவில்லை. காற்றுதான் மறுபடி அவன் முகத்தில் சாட்டையாய் அடித்தது.

நிச்சயமாய் ஏதோ வந்துகொண்டிருக்கிறது.

காற்றின் சுழற்சியைக் கொண்டு அவனால் அனுமானிக்க முடிந்தது. ஏதோ ஒன்று இரவின் இறக்கைகளைக் கட்டிக்கொண்டு ஓடிவருகிறது. கடகடவென்று முன்னேறுகிறது...



nbt.india
एकः सूते सकलम्

அதோ, அதோ! ஒரு ரயில்...ரயிலேதான்!

"நிர்மல், சீதன்தேவி, எல்லோரும் ஒடுங்க, ஒடுங்க!"

ஆனால் ஓடிப்போக நேரமில்லை. எஞ்சினின் நீராவி பீய்ச்சும் ஓசை தனக்கு முன்பக்கம் கேட்பதை அவன் உணர்ந்தான். ஐம்பது கஜ தூரம்கூட இருக்காது. சில வினாடிகளில் அது அவர்கள் அனைவரையும் அரைத்துவிடும்... எஞ்சினை உணரமுடிந்தது, ஆனால் காண முடியவில்லை.

விளக்குகள் இல்லாத பிசாசு ரயில்!

"குதியுங்க! எல்லாரும் குதியுங்க!"

நிர்மலை அலாக்காகத் தூக்கிக்கொண்டு சத்ருக்னா தண்ட வாளத்தை விட்டுத் தாவிக்குதித்தான். அதிரும் பாலத்தின் எஃகுத் தூண்களிடையே ஒண்டிக்கொண்டான். வலப்புறம் திரும்பிப் பார்த்தான். ஒரு நீராவி எஞ்சினின் கனத்த கருநிழல் இடிமுழக்கமாய் இருளில் பாய்ந்து வருவதைக் கண்டான்.

மறுகணம், ஆவென்ற அலறல்... சீதன்தேவியின் குரல்போல் இருந்தது. ஆனால் பேய் எஞ்சினின் பேரிரைச்சல் எல்லாக் கூக்குரல்களையும் விழுங்கிவிட்டது.

"கடவுளே காப்பாற்று" சத்ருக்னா சில்லிட்ட எஃகுத் தூணோடு தூணாய் இறுக ஒண்டிக்கொண்டதில் அவன் கையிலிருந்த நடுங்கும் சிறுமி கிட்டத்தட்ட நசுங்கிப்போனாள். இஞ்சின் விரைந்து சென்றபோது வீசிய எதிர்காற்று அவனைத் தடுமாற வைத்தது.

திடுதிப்பென்று பூதமாய் வந்த மாதிரியே அந்த ஒற்றை எஞ்சின் ஓடி மறைந்தது. பிறகு அலை ஓய்ந்த அமைதி – மயான அமைதி – பயங்கர நிசப்தம். ஏன் யாருமே கத்தவில்லை?

மௌனத்தைக் குலைத்து நிர்மல்தான் வீறிட்டாள், "அம்மா... அம்ம்ம்மா...!" பதில் இல்லை. எஞ்சினையும் டிரைவரையும், ஏன் தங்கள் இருவரையும் கூட சீதன்தேவி சபித்துக்கொண்டே வருவாள் என்ற சத்ருக்னாவின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாயிற்று. எந்தத் திசையிலிருந்தும் எந்தச் சத்தத்தையுமே காணோம். சாவின் அமைதியில் இரவு சலனமின்றிக் கனத்தது...



nbt.india एक: सूत्रे संवादम

“சீதன்தேவி, ப்ப்லி, சுக்குபாய்...” சத்ருக்னா ஒவ்வொருவராய்ப் பெயர் சொல்லிக் கூப்பிட்டான். பதில் இல்லை.

பயம் அவன் நெஞ்சைக் கவ்வியது. என்ன ஆயிற்று? அவர்கள் எல்லாரும் எங்கே?

திடீரென்று ஒரு சிணுங்கல் ஒலித்து வேதனை வீறலாய் வடிவெடுத்தது. ‘பப்லி, அது பப்லி’ அவன் இருட்டில் கத்தினான், “பப்லி, எங்கே இருக்கே...?”

நிர்மல் அவன் மார்பில் முகத்தைப் பதித்து, “வீட்டுக்குப் போகணும்” என்று பெரிதாய் அழத்தொடங்கினாள்.

“போலாம் நிர்மல், அழாத” என்ற அவளைத் தேற்றினான் சத்ருக்னா. தன் பதற்றத்தைக் காட்டாமல் இயல்பான குரலில், “இப்ப போயிரலாம்... கொஞ்சம் பொறு. என்ன ஆச்சுன்னு பாக்கலாம்” என்று கூறியவாறு அவளைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டான். இருப்புப் பாதைக்கிடையே சென்று இருட்டில் தேடினான். சிறுபெண் வலியால் கதறும் ஒலியைக்





nbt.india
एकः सूते सकलम्

குறிவைத்துக் கட்டைகள் மீது கவனமாய் நடந்து கண்களை அகல விரித்துக்கொண்டு தேடினான். “பப்லி, பப்லி” என்ற இதமாய்க் கூப்பிட்டான்.

அவன் காலில் இடறி ஏதோ ஒன்று உருண்டது. ஒருகணம் கால்கள் நிலைத்தன. ‘கூடாது… மனம் தளரக்கூடாது… குழந்தையைத் தேடிக் காப்பாற்ற வேண்டும்’. அவன் குனிந்து குறுக்குக் கட்டைகளிடையே கூர்ந்து நோக்கினான். கைவிரல்களால் கற்களைத் துழாவினான். கால்களை உதைத்துக் கொண்டு திணறும் ஒரு குழந்தையின் உடம்பு தட்டுப்பட்டது. மெதுவாய் அதை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டான். “பப்லி, பப்லி” என்று கனிவாய்க் கூப்பிட்டுக் குழந்தையின் முதுகை அவன் பிரியமாய் வருடியபோது ஒரு பிளந்த காயத்திலிருந்து ஒழுகிய இரத்தம் விரல்களில் பிசுபிசுத்தது.

அவனுக்குத் தலை சுற்றியது. சமாளித்துக்கொண்டான். சற்றும் தாமதிக்காமல் உடனே போயாக வேண்டுமென்று உள்ளுணர்வு சொல்லிற்று. ஆனால் இயலவில்லை. “சீதன்தேவி… சுக்குபாய்…” என்று மூச்சைப் பிடித்துக்கொண்டு இருட்டில் மீண்டும் கூப்பாடு போட்டான்.

பெயர்கள் காற்றில் கரைந்தன. பதில் வரவில்லை. “வா, நிர்மல், என் கையைப் பிடிச்சுக்கோ” என்று அவளை இடுப்பிலிருந்து இறக்கினான். “இப்ப உடனே நமக்கு உதவி வேணும்” என்று கிளம்பினான். ஆனால் உதவி அவ்வளவு சீக்கிரத்தில் கிடைத்துவிடாது என்று மனம் ஊமையாய் அழுதது.

அவன் இரு குழந்தைகளுடன் திரும்பி நடக்கலானான். பக்கத்து கிராமம் முங்க்ரி. ஆனால் அதற்கும் நீண்ட தொலைவு நடக்க வேண்டும். இருப்புப்பாதையை விட்டு இறங்கிச் சாலையைத் தேடினான். நிர்மலைக் கையில் பிடித்துக்கொண்டு, காயமுற்ற குழந்தையை மார்பில் சாய்த்துக்கொண்டு இருளில் தட்டித்தடுமாறி நடந்தான். கிளைகள் முகத்தில் உரசின; கைகளில் கீறின; காலைத் தடுக்கின. நிர்மலுடன் அவனும் கீழே விழுந்தான். குழந்தை விழுந்துவிடாமல் பிடித்துக்கொண்டான்.

nbt.india
एक: सूते सकलम्

சமாளித்து எழுந்து, விக்கித்துப்போன நிர்மலையும் நிற்கவைத்து, “ஒன்றுமில்லை நிர்மல், இதெல்லாம் ஒன்றுமேயில்லை” என்று ஆறுதல் சொல்லி மீண்டும் தட்டித் தடவி நடக்கலானான்.

ஓர் ஆந்தையின் அதீத அலறல் அவனை அச்சுறுத்திற்று. இரவு வேளை அத்தனை கறுப்பாக, களேபரமாக, கலக்குவதாக இருக்குமென்று அவனுக்குத் தெரியாது.

ஏதோ ஒன்று கரிய சிறகுகளால் அவன் மீது உராய்ந்து கொண்டு சென்றது. அதிர்ச்சியில் உடலைப் பின்னுக்கிழுத்தான். ‘வௌவாலாய் இருக்குமோ?’ நீண்டு அடர்ந்த புல்புதரில் ஏதோ சலசலப்பு. திடுக்கிட்டான். நின்று உற்றுக்கேட்டான். இரவின் இருளில் எத்தனையோ விசித்திர ஒலிகள்... நரியின் ஊளை, கழுதைப்புலியின் எகத்தாளச்சிரிப்பு... எங்கு திரும்பினாலும் ஒவ்வொரு மூலையிலும் ஏதோ அபாயம் காத்துக்கொண்டிருப்பதுபோல் தோன்றியது. விஷப்பாம்புகள், நச்சுத்தேள்கள், காட்டு நாய்கள், ஏன் ஓநாய்களும் புலிகளும்கூட இருக்கலாம்... இந்த எண்ணங்களையெல்லாம் அவன் உதறிவிட முயன்றான். தன் உறுதியைத் தகர்க்கும் எதைப்பற்றியும் எண்ணுவதில்லை என்று தனக்குத்தானே துணிவூட்டிக்கொண்டான். எப்பாடுபட்டாகிலும் முங்க்ரியை அடைந்தாக வேண்டும்... அவன் நடந்தான்.

அல்லல்பட்டு ஆற்றாமையுடன் ஒருவழியாய் முங்க்ரியை அடைந்துவிட்டான். ஒரே அசதி. இடுப்பு ஒடிகிற நிலையில் தள்ளாடியவாறு முதல் குடிசையின் கதவைத் தட்டினான். “காப்பாத்துங்க” என்று கத்தினான். “காப்பாத்துங்க! வைத்தியர் இருக்கிறாரா? ஒரு குழந்தை செத்துக்கிட்டிருக்கு.”

ஒரே நிமிடத்தில் கிராமம் முழுவதுமே அவனைச் சுற்றிக் கூடிவிட்டது.

“என்ன ஆச்சு தம்பி? என்ன நடந்தது?”

“ஐயோ...உடம்பெல்லாம் ரத்தம்! ஏன் தம்பி, அடிபட்டதா?”

“எனக்கு ஒண்ணுமில்லை. குழந்தை... இந்தக்குழந்தை... இவளைக் காப்பாத்துங்க. நாங்க பத்துப்பேர் இருந்தோம்.

nbt.india
एकः सूते सकलम्

ஆனா இப்போ மூணுபேர்தான் இருக்கிறோம். மத்தவங்க என்ன ஆனாங்கன்னு தெரியலை. ஒரே இரத்தவெள்ளமா இருந்தது. ஒருவேளை அவங்க எல்லாருமே...” அவன் அப்படியே சரிந்து கிராமத் தலைவரின் கரங்களில் சாய்ந்தான். நினைவிழந்தான்.

* * *

மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த முங்க்ரி கிராமவாசிகள், சத்ருக்னாவுடன் ரயில்பாதை மீது மௌனமாய் நடந்து ராய்கர் என்னும் இடத்தை நோக்கிப் போனார்கள். சிறுவனின் குழறல் வார்த்தைகள்தாம் இன்னமும் அவர்கள் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தன.

கடைசியாக அவர்கள் ஃபுலிஜிட் பாலத்தை அடைந்ததும் தங்கள் விளக்குகளின் வெளிச்சத்தைக் கூட்டினார்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களின் இரத்தத்தை உறைய வைத்தது. தண்டவாளங்களுக்கும் குறுக்குக் கட்டைகளுக்கும் இடையே இரத்தவெள்ளத்தில் உருத்தெரியாமல் சிதைந்த ஏழுபேரின் எஞ்சிய பாகங்கள் கிடைத்தன.

கிராமவாசிகள் துக்கம் தாளாமல் விளக்குகளைத் தாழ்த்தி முகங்களை வேறுபுறம் திருப்பிக்கொண்டார்கள்.

“எப்படி இது நடந்திருக்க முடியும்?” கிராமத்தலைவர் வாயைத் திறந்தார்.

“உனக்கு ரயிலின் விசில் சத்தம் கூடவா கேட்கலை, தம்பி?”

“டிரைவர் விசிலை ஊதவே இல்லையே. எஞ்சினில் விளக்குகளும் இல்லை.”

“எஞ்சின் விளக்குகள் கெட்டுப்போயிருக்கும்.”

“எரியாத விளக்குகளுடன் ஒரு தனி எஞ்சின்...” ஒருவர் தமக்குள் மெல்லச் சொல்லிக்கொண்டார். “ஒரு சிறிய கோளாறினால் எவ்வளவு பெரிய விபரீதம்...!”

“இரண்டு நிலையங்களுக்கிடையே போய்ப் போய் வந்த எஞ்சினாய் இருக்கும். அது காலனாக வந்து தொலைத்து விட்டதே...”

nbt.india
एकः सूते सकलम्

“எஞ்சின் வருகிற சப்தம் கூட உனக்குக் கேட்கலையா? இருக்காது. உனக்கு நிச்சயமாய்க் கேட்டிருக்கும்!”

“ஆமாம்...எனக்குக் கேட்டது. ஆனால் மற்றவர்களுக்குக் கேட்கவில்லை. அப்படியே கேட்டிருந்தாலும் தப்பித்து ஓட நேரமில்லை” சத்ருக்னா கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதான்.

“அழாதே தம்பி. உன் மேல தப்பில்லை. நீ உன்னால் முடிஞ்சதைச் செய்திருக்கிற. எங்கள் யாராலும் இந்த மாதிரி செஞ்சிருக்க முடியாது” என்ற கிராமத்தலைவர் தமக்கு இடப்புறமிருந்த ஓர் ஆளைப் பார்த்து, “பகதூர்லால், இந்தப் பையனை வீட்டில் கொண்டு விடு” என்றார். “தம்பீ, போய்வா, கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்...”

சத்ருக்னாவும் பகதூர்லாலும் புறப்பட்டார்கள். முங்க்ரியை நோக்கி மௌனமாய் நடந்த அவர்களுக்கு, மரணமும் தங்களுடன் நடந்து வருவதைப் போலிருந்தது.

nbt.india
एकः सूते सकलम्

## “கருணை நிரம்பிய மேரி எங்களைக் காப்பாற்று!”

1965 பிப்ரவரி 22 சனிக்கிழமை என் வாழ்வில் முக்கியமான நாள். இந்நாளை எந்நாளும் என்னால் மறக்கவியலாது. ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் கழிந்துவிட்ட பிறகும் இன்று கூட, இறப்போரின் அவலக்குரல்களும், குழந்தைகளின் தவிப்புக் கூச்சல்களும் இன்னமும் என் காதுகளில் ஒலிக்கின்றன. “மேரி, கடவுளின் அன்னையே, எங்களுக்குக் கருணை காட்டு” என்ற அவர்களின் இறுதிப் பிரார்த்தனையையும், ஊடுருவி உன்மத்தமாய் ஊளையிட்ட சூறாவளியையும் இப்போதும் நான் உணர்கிறேன்.

அன்று என்னைத் தனது கரங்களில் இழுத்தணைத்து ஒரு குழந்தைபோல் தாலாட்டிய என் தாயின் கலக்கம் நிரம்பிய கண்கள் என்றும் என் நினைவில் நிற்பவை. “ஃபெலிஸிடஸ், மகளே, உன்னை எனக்கு மீட்டுத்தந்த கர்த்தருக்கு நன்றி. கருணை நிரம்பிய மேரி, என் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்தாயே, வாழ்க நீ!”

பிறகு நான் அன்னையின் தோளில் முகத்தைப் புதைத்துப் புலம்பினதும், அவள் மண்டியிட்டு அமர்ந்து என் கால்களை எண்ணெயில் நனைத்துக் குளிப்பாட்டியதும் எல்லாம் நினைவில் நிற்கின்றன. கால்களை எண்ணெயில் முழுக்குவது ஒரிஸ்ஸாவில் ஜுன்மீர் ஊரில் உள்ள ஒரு வழக்கம்.

* * *

nbt.india एकः सूते सकलम्

“போய் வா, ஃபெலிஸிடஸ்” என்ற அம்மா உச்சிமோந்து விடை கொடுத்தாள். “மகளே, உனக்குத் தெரியும். எனக்கும் உன்னோடு வர ஆசைதான். ஆனா சிறிசுகளை விட்டு விட்டு நான் கிளம்ப முடியாது. உன் அப்பாவுக்கும் வயல் வேலையில் என் ஒத்தாசை தேவை. ஆகவே, நீ மட்டும் போய்ட்டு வா. கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக! தமது கருணைக் கேடயத்தால் உன்னைக் காப்பாராக!” என்றாள்.

“வருகிறேன் அம்மா” என்று நான் விடைபெற்றேன். அம்மாவும் எங்களோடு கேஸரல் கிராமத்துக்கு வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணினேன். ஆற்றைக் கடந்து ஐந்து மைல் போகவேண்டும். இப்போது நினைத்தால், அம்மா அன்று வராததே நல்லது என்று தோன்றுகிறது.

“ஃபெலஸி...” பின்னாலிருந்து பரிச்சயமான ஒரு குரல் கேட்டது. “உன் அலங்காரம் அற்புதம்!” ஃபிலோமினாதான். அவளைக் கவனிக்காதமாதிரி போக நினைத்தேன். ஆனால் அது முடியுமா? அவள் என் சிறந்த சிநேகிதியாயிற்றே! “ஃபெலஸி,” என்று மறுபடி அவள் கூவிக்கொண்டே என்னைச் சுற்றி வளைய வந்தாள். “இந்த ஆரஞ்சு வர்ணப் புடவையில் நீ ரொம்ப அழகாயிருக்கிற. அதற்குப் பொருத்தமான நிறத்தில் ஜாக்கெட். அட, காதில கூட புது ஜிமிக்கி! அசல் வெள்ளியா?” என்று பூரிப்புடன் அதைத் தட்டி ஆட்டினாள்.

நான் பொய்க் கோபத்துடன் அவள் விரல்களை விலக்கினேன். “பேசாமலிரு ஃபிலோ, பதினாறு வயசாகிறது உனக்கு. நீ இன்னும் குழந்தையில்லை.” ஆனால் உடனேயே எங்களைப் போன்ற பதினாறு வயதுப் பெண்களுக்கு முற்றிலும் முரணான விதத்தில் நாங்கள் இருவருமே கத்திவிட்டோம். “படகு, படகு! அதை விட்டுவிடப் போகிறோம், ஓடு!”

புடவைத் தலைப்பின் மடிப்புகள் பின்னால் பறக்க, கொசுவத்தைக் கையால் பிடித்துக்கொண்டு, கண்ணாடி வளையல்கள் குலுங்க, படகுத்துறைக்கு ஓட்டமாய் ஓடினோம். கரையோரத்திலிருந்து அப்போதுதான் நகர ஆரம்பித்திருந்த

nbt.india
एकः सूते सकलम



nbt.india

நீளமான படகில் தொப்பென்று குதித்தோம். “வருகிறோம். இனி திங்கட்கிழமை பார்ப்போம்” என்று கைகளை அசைத்து, கரையில் நின்ற உற்றார் உறவினர்களைப் பார்த்துக் கூவினோம். மெல்ல மெல்ல மக்கள் திரளும், ஊரும் பார்வையிலிருந்து விலகிக்கொண்டே போயின. கேஸரல் கிராமத்தில் நடக்கப் போகும் புனித மேரியின் கோலாகலமான ஊர்வலத்தில் கலந்து கொள்ளப் போகிறோம் என்ற மகிழ்ச்சி மனதில் நிறைந்தது.

பச்சைப் பசேலென்ற தண்ணீரில் படகு அலுங்காமல் நலுங்காமல் ஊர்ந்தது. தொடுவானத்தில் அந்தி மாலைச் சூரியக் கோளம் ஆரஞ்சு வர்ணத்தை வாரி அப்பியிருந்தது. ஆற்றின் இருமருங்கிலும் காற்று தன் மென்மையான கரங்களால் பனை மரங்களைத் தாலாட்டியது, வயல்களில் தழைத்த நெற்பயிரை அலையலையாய் வருடிக்கொண்டே போயிற்று. படகில் இருந்த ஆண், பெண், குழந்தைகள் உள்ளிட்ட தொண்ணூறு பேரும் கைகளைக் குவித்துக் கர்த்தரின் புகழ்பாடித் துதித்தார்கள். ஃபிலோவும் நானும் அவர்களுடன் சேர்ந்து பாடினோம். ஆற்றுக்கு அக்கரையில் கறுத்த தோப்புக்குப் பின்னாலிருந்து அடர்ந்த இருட்டு தவழ்ந்து வந்தது. இரவின் வருகையா அது?

உரமேறிய கைகளால் சுக்கானைப் பிடித்திருந்த வயதான படகோட்டி புருவங்களை நெரித்து ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கண்களால் அளப்பதை நான் எனது கவலைக் கண்களால் நோக்கினேன். திடீரென்று வீசிய குளிர்ந்த சுழல் காற்று நீர்ப்பரப்பின் மேலாக அலைகளை கிளப்பிச் சென்றது. ஓடம் ஆடிற்று. குழந்தைகள் அலறினர்.

“ஒண்ணுமில்லை... ஒண்ணுமில்லை... அமைதியாயிருங்க” என்று மற்ற துடுப்புக்காரர்கள் சத்தம் போட்டார்கள். ஆனால் வனத்துக்குப் பின்னாலிருந்து வானத்தில் கறுப்பாய் அச்சுறுத்துகிற மாதிரி திரண்டு வந்த மேகக்கூட்டம் அவர்களின் வார்த்தைகளைப் பொய்யாக்கிற்று.

ஆறு மாறிற்று. அலைகள் படகை அலைக்கழித்தன; சட்டங்களில் மோதியடித்தன. குழந்தைகள் தம் அன்னையரின்

nbt.india
एकः सूते सकलम्

மடியில் அஞ்சி ஒடுங்கினார்கள். ஆண்கள் கவலை தோய்ந்த கண்களால் அக்கரையை நோக்கினார்கள். நாங்கள் அப்போது நதியின் மத்தியில் இருந்தோம்.

நான் ஃபிலோமினாவின் பக்கம் திரும்பினேன். “என்னால் நீந்த முடியாதே...” என்று முகம் வெளிறி அவள் முணுமுணுத்தாள். எனக்கு நீச்சல் தெரியும், ஆனால் படகிலிருந்த பலருக்குத் தெரியாது.

என் முதுகெலும்பில் பூச்சி ஊர்வதுபோல இருந்தது. சொல்லி வைத்தாற்போல எல்லாரும் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தோம். “பரமண்டலத்திலிருக்கும் பிதாவே...” கிடுகிடுவெனக் கறுத்துக் கொண்டே வந்த வானத்தையும் எட்டும்படியாய் நாங்கள் ஓதிய பிரார்த்தனையின் ஒலி, காற்றின் ஓலத்தில் ஒடுங்கிற்று.

துடுப்புக்காரர்கள் தம் முகங்களைக் கடுமையாக்கி மூச்சைப் பிடித்துக்கொண்டு படகு வலித்தார்கள். ஒவ்வொரு வலிப்பிலும் தங்கள் வலு முழுவதையும் திரட்டிப் போட்டார்கள்.

படகுக்குள் நீர் கசிந்தது.

“தூய மரியன்னையே, எங்களுக்கு இரக்கம் காட்டு...”

பளீரென்று கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னல் கொந்தளிக்கும் நீரில் ஒளிர்ந்தது.

“மேரி, யேசுபிரானின் தாயே, மக்களின் மாதா...”

“துடுப்பைப் பலமாய்ப் போடுங்க...” முழங்கினார் படகோட்டி. “உம்...வேகம்... இன்னும் வேகம்...” நாங்கள் ஒருவர்க்கொருவர் ஒட்டி உராய்ந்து தொடர்ந்து பிரார்த்தித்தோம்.

புயல் சீறிற்று. ஆறு அலை மோதிற்று. அலைகளிடையே சிக்கிப் படகு தத்தளித்தது. படீரென்று படகின் பக்கவாட்டில் மோதிய காற்றின் வேகத்தில் நாங்கள் இருக்கைகளிலிருந்து தூக்கி எறியப்பட்டோம். வீறிட்டலறி ஒருவர் மீது ஒருவர் விழுந்தோம். குழந்தைகள் நசுங்கி மிதிபட்டன. ஒரு முழங்கை என் முகத்தில் இடித்தது. ஒரு முழங்கால் என் முதுகில் குத்திற்று.

“ஃபெலஸி, ஃபெலஸி” என்று கத்திய ஃபிலோவைக் கையால் தொட முயன்றேன். ஆனால் எங்கள் கைகள் எட்டவில்லை.

nbt.india एक: सूत्र सकलम्

அதற்குள் படகு தடாலென்று பக்கவாட்டில் குடைசாய்ந்தது. அவ்வளவுதான், நாங்கள் அத்தனைபேரும் கிளர்ந்தெழுந்த தண்ணீரில் தலைகுப்புறத் தள்ளப்பட்டோம். குளிர்ந்த நீர் என்னை அழுத்தி உள்ளே இழுத்தது. சுழலின் வேகத்தை மீறித் திமிறினேன். கால்களையும் கைகளையும் கண்டபடி உதறி மேலெழும்ப உந்தினேன். ஒரு கை என்னைத் தொட்டது, வழுக்கியது, போய்விட்டது. ‘ஃபிலோ, ஃபிலோ...’

நுரையீரல்கள் பிளக்கிறமாதிரி மூச்சுத்திணறி நீரின் மேல் மட்டத்திற்கு வந்தேன். உயிருக்குப் போராடும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரின் பரிதாபக் கதறல்களும் காற்றில் கலந்தன. படகின் பலகைகளைப் பற்றிக்கொள்ளப் பல கைகள் பரபரத்தன, வழுக்கின, நழுவின, விழுந்தன. ஒருவரையொருவர் இடித்து மோதித் தப்பிக்கும் வெறியில் சிலர் தோணியைப் பிடித்துத் தொங்கினர். சில விநாடிகள்தாம். உடனே ஒரு பேரலை படகை தூக்கி விளாசிற்று. அதுவும் நீரில் அமிழ்ந்தது.

நான் உதவ முடியாதா? அவர்கள் மூழ்குவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர ஒன்றுமே செய்ய முடியாதா...? சுமார் முப்பதடி தூரத்தில் ஒரு பெரிய மரத்துண்டு மிதப்பதைக் கண்டேன். அதன்மேல் சிலர் பாதுகாப்பாக ஏறி நிற்பதும் தெரிந்தது. அந்தத் திசையில் கண்ணை மூடிக்கொண்டு காற்றை எதிர்த்து விசையாய் உந்தினேன்.

“ஃபெலிஸிடஸ், ஃபெலிஸிடஸ்” என்று கூவியவாறு அந்த மரத்திலிருந்து என்னை நோக்கி நீண்ட உதவிக் கரங்களைப் பற்றினேன். “மேலே வா, நீரை உதைத்து மேலேறு” என்று கத்தினான் மார்க்கஸ். மரத்தின் மீது பதற்றத்துடன் நின்ற ரேமண்ட், டேவிட், மார்க்கஸ், மேரி ஆகியோருக்கிடையே மூச்சிரைக்கச் சாய்ந்தேன். அவர்களும் என்னைப்போலவே தப்பித்திருக்கிறார்கள்! ஆனால் மற்றவர்களின் கதி? ஃபிலோ? என் அருமைத் தோழி...?

“ஃபிலோ...” என்று காற்றே அதிரும்படியாய்க் கத்தினேன்.

nbt.india
एकः सूते सकलम्



nbt.india



nbt.india
एकः सूते सकलम्

"அவன் முழுகிக்கிட்டிருக்கிறான்" கத்தினாள் மேரி. "அவனால் இங்க வரமுடியாது. அவனுக்குச் சரியா நீந்த வராது. அதோ அவன் அடியில் போய்ட்டிருக்கான்!"

காற்றின் கூச்சலையும் நீரின் பாய்ச்சலையும் தவிர வேறு ஒலி இல்லை.

பயத்துடன் நான், மேரி, டேவிட், ரேமண்ட், மார்க்கஸ் ஒவ்வொருவரையும் பார்த்தேன். யாரும் நகரவில்லை.

"காப்பாத்து!"

டங்டங் மீண்டும் அழைக்கிறான்! எங்கள் கண்ணுக்கு எதிரேயே எங்கள் தம்பி முழுகிக் கொண்டிருக்கிறான்!

சட்டென்று பதற்றம் நின்று என்னுள் ஓர் அமைதி எழுந்தது. நான் நிமிர்ந்தேன். புடவையைச் சுருட்டி மடக்கி இடுப்புப் பாவாடையில் திணித்துக்கொண்டேன். எழுந்தேன். குமுறும் நீரை நோக்கிக் கூவினேன், "சாமுவேல், இரு... இதோ நான் வர்றேன்!" நீரில் தாவினேன்.

நீரை அடித்து உதைத்து எதிர்க்காற்றில் நீந்தினேன். பாவாடையும் புடவையும் ஈரமாகி, பாரம் கனத்தது. "சாமுவேல், இதோ நான், இங்கே..." என்று கத்தினேன். ஏதோ ஒன்று குமிழியிட்டுக்கொண்டு மேலெழும்பிற்று. முதலில் ஒரு கை, அப்புறம் ஒரு தலை... சாமுவேலின் தலை... பக்கத்தில் நான் போய்விட்டதால் அவனது பயந்த விழிகளைப் பார்க்க முடிந்தது. "காப்பாத்து" அவன் கத்தினான் "காப்பாத்து..."

"புடவையைப் பிடிச்சுக்கோ, உன்னை இழுக்கிறேன், இந்தா பிடி" என்று கத்திக்கொண்டே இடுப்பிலிருந்து புடவைச் சுருளை உருவி ஒரு முனையைப் பற்களில் இடுக்கிக்கொண்டு மீதியைப் பந்துபோல் அவனை நோக்கி வீசினேன். ஆனால் அவன் கைக்கு அகப்படாதபடி காற்று அதைத் தள்ளிப்போட்டது.

"அதைப்பிடி, டங்டங்."

சாமுவேல் திக்குமுக்காடியவாறே அதை நோக்கி நகர்வதைப் பார்த்தேன்.

"பிடி அதை, சாமுவேல், பிடி அதை" என்று எனக்குப்

nbt.india
एकः सूते सकलम्

பின்புறமிருந்தும் குரல்கள் கேட்டன. “ஒ தூய யேசு! அவனால் முடியலை! அவன் முழுகுறானே!”

“ஃபெலிஸி, திரும்பி வா” இருளைத் துளைத்து மார்க்ஸின் குரல் ஒலித்தது. நான் திரும்பத்தான் போகிறேன், ஆனால் ஒண்டியாக அல்ல, சாமுவேலையும் உடன் அழைத்துக் கொண்டுதான்...

திடீரென்று புடவை இழுபடுவதை உணர்ந்தேன். பற்களின் பிடியிலிருந்து அது கிழிந்துவிடும் போலிருந்தது. அதை இன்னும் கொஞ்சம் இழுத்து இறுக்கிக் கடித்துக் கொண்டேன். திரும்பி, கட்டையை நோக்கி நீந்தலானேன். கண்களை மூடி, கால்களால் உதைத்து, கைகளால் அடித்து உந்தினேன். உடல் ஒய்ந்தது. இனிமேல் முடியாது என்று தோன்றியது. நான் விடைபெறப்போகும் இந்த உலகத்தை இறுதியாய் ஒரு தடவை பார்த்துவிடலாமென்று கண்ணைத் திறந்தேன். எதிரே நான்கு ஜோடிக்கண்கள் பயத்துடன் என்னையே பார்த்துக்கொண்டிருந்தன.

“ஃபெலிஸிடஸ், வா வா!” என் சக்தியை எல்லாம் ஒன்று சேர்த்து உந்தினேன். முன்னால் நீண்ட மார்க்ஸின் கைகளைப் பிடித்தேன். ஆம்! வந்து சேர்ந்துவிட்டேன். இருவருமாய் இணைந்து புடவையை இழுத்து, சாமுவேலை மேலே தூக்கினோம். அவன் இருமினான். குடம்குடமாய்த் தண்ணீரை வாயிலெடுத்தான்.

கலக்கமும் கதறலுமாய்க் களைப்பையும் மீறி நாங்கள் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு கடவுளைத் துதித்தோம். “கர்த்தரே! எங்கள் பிதாவே!”

“காப்பாத்து” காற்றில் இன்னொரு குரல், “காப்பாஆஆஆ...”

சாமுவேல் மெல்லத் தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தான். “அது கிண்டோ. அவன் முழுகிக்கிட்டிருக்கிறான்” என்று முனகினான்.

நிசப்தம். யாரும் பேசவில்லை. காற்றும் காலமாகிவிட்டது போலிருந்தது.

நான் சிலிர்த்துக்கொண்டேன். அனிச்சையாய் எழுந்தேன். அந்தக் குலுங்கும் நீருக்குள் மீண்டும் குதித்தேன்.

* * *

1965 பிப்ரவரியின் அந்த துரதிர்ஷ்டமான நாளில் நிகழ்ந்த விபத்தில் சுமார் ஐம்பது பேர் உயிரிழந்தனர். லியோவும் அவன் முழுக்குடும்பமும், மார்கரெட்டும் அவள் குழந்தையும், என் சிறந்த சிநேகிதி ஃபிலோமினாவும் இன்னும் பலரும் மாண்டனர்.

சூறாவளியின் சீற்றம் தணிந்தபின், நாங்கள் கட்டையை விட்டுக் கரையை நோக்கி நீந்தினோம். கரையேறியபின், வேறு யாரேனும் தப்பித்து வரக்கூடும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தோம். ஆனால் காத்திருந்ததுதான் மிச்சம்...

nbt.india
एकः सूते सकलम्

# இரவில் ஒரு தாக்குதல்

*1980 ஜனவரி 14.* இரவு ஒரே கும்மிருட்டாகவும் குளிராகவும் இருந்தது. கருத்த மேகங்களின் குவியலைக் கிழித்துக்கொண்டு பிரகாசிக்க நிலவு முயற்சி செய்து தோற்றது. குன்றுகளிலிருந்து புதுப் பனியின் மணத்தைச் சுமந்து புறப்பட்ட குளிர் காற்று உத்திரப்பிரதேசத்தின் ராம்நகர் என்னும் சிறிய கிராமத்துச் சந்தடியற்ற குறுகல் சந்துகளில் புகுந்து வீசிற்று. நுழைய விடு என்று ஆணையிடுவதுபோல மரக்கதவுகளையும் அவற்றின் இரும்பு நாதாங்கிகளையும் படார் படாரென்று ஓசைப்படுத்திற்று. கல்லும் களிமண்ணும் கலந்து கட்டிய வீடுகளின் உயரமான சிறிய பலகணிகள் வழியே சீறிற்று. கொல்லைப் புறங்களின் வழியே சுழன்று உறுமிற்று.

காற்றின் ஓலத்தைக் கேட்டு, சதீஷ்குமார் ஃபூல்சிங் நடுங்கினான். அடுப்பங்கரைக்குப் பக்கத்து அறை மூலையில் சுருண்டு முடங்கியிருந்த அவனது சிறிய தலையணை சில்லிட்டது. கட்டில் ஒன்றில் அவன் தந்தை இருமிக்கொண்டே புரண்டு படுத்தார். இன்னொரு கட்டிலில் அவன் தங்கை சீதா, அம்மாவின் கதகதப்பான அரவணைப்புக்காக அருகில் ஒண்டினாள். உறக்கத்தில் அவள் ஏதோ உளறவே, "ஷ்ஷ்..." என்று அம்மாவும் தூக்கக் கலக்கத்தில் முனகி, நைந்த போர்வையை அவள் மீது இழுத்து மூடினாள்.

அவனுக்கு அருகே தம்பி அசைந்தான். "நாசமாய்ப் போற குளிர்" என்று அலுத்துக்கொண்டான். "போர்த்துக்கொள்ள வேற ஒண்ணுமே இல்லையா?"

nbt.india
एकः सूते सकलम्

இல்லை என்று சதீஷுக்குத் தெரியும். அவன் அப்பா கூலி வேலை செய்தார். அண்ணன் விநோத் ரிக்ஷா இழுத்தான். அவர்களுடைய அற்ப வருமானம் எட்டுப்பேர் கொண்ட குடும்பத்துக்கு போதவில்லை. சதீஷும் தன் பங்குக்கு ஏதோ கொஞ்சம் சம்பாதித்தான். அதற்காக மான்சந்த் வீட்டு ஆடுமாடுகளை மேய்த்தான்.

பக்கத்து வீட்டு மான்சந்த் பெரிய பணக்காரர் இல்லை. அவரும் மனைவியும் வயோதிகர்கள். அவர்களின் பிள்ளைகள் பிழைப்புக்காக எப்போதோ பாட்னா போய்விட்டார்கள். பிறகு பிள்ளைகளிடமிருந்து தகவல் இல்லை. சதீஷ்குமார் மீண்டும் நடுநடுங்கினான், இம்முறை குளிரினால் அல்ல, வருங்காலம் பற்றி இனம்புரியாத ஒரு பீதி அவனைப் பீடித்ததால். வறியோர் வாழ்க்கையே வாட்டந்தானே...

அங்கே என்ன சப்தம்...?... காற்றா? இல்லை... கூரை மீது தடதடவென்ற காலடிகளின் ஓசை. தொடர்ந்து ரகசியக் குரலில் ஒரு கட்டளை. "போ, இடது பக்கம் திரும்பு, அடுத்த வீடு..."

சதீஷுக்கு சப்தநாடியும் ஒடுங்கிற்று.

"சதீஷ்" என்று கூப்பிட்டார் அப்பா. "நீ ஏதாவது சத்தம் போட்டியா?"

"இல்லப்பா. வெளிய யாரோ இருக்கறா போலிருக்கு..."

"யாரு? எங்க?" அம்மா அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தாள். "கன்னுக்குட்டி... நம் கன்னுக்குட்டியைப் பிடிக்க அலையறாங்களோ?"

"ஏதாவது தெருநாயா இருக்கும்" என்று தனக்கே நம்பிக்கை யில்லாமல் முணுமுணுத்தார் அப்பா. "எதுக்கும் நா கொட்டிலைப் பூட்டிட்டு வர்றேன்..."

அப்பா இறங்கி இருட்டில் தட்டுத் தடுமாறி செருப்புகளைத் தேடினார். திடீரென்று இரவின் மௌனத்தைக் குலைத்து ஒரு பெருங்கூச்சல் கேட்டது. கூடவே ஒரு மரக்கதவு ஓங்கி அறையப்படும் ஓசை. "திற" ஒரு கட்டைக்குரல் உறுமிற்று. "கதவைத் திற, இல்லைன்னா சுட்டுருவோம்..."

nbt.india
एक सूत्र संसार

சதீஷ் வீட்டு அந்தச் சிறிய அறையில் யாரும் அசைய வில்லை. பிறகு அம்மா சத்தமே வராமல் கிசுகிசுத்தாள், "கொள்ளைக்காரங்க! அடக்கடவுளே!" ஒரே வினாடியில் அப்பா வாசலுக்குப் போய் கதவைத் திறந்தார். "நானும் வர்றேன்..." சதீஷ் அவரைத் தாண்டி முன் அங்கணத்துக்குப் போனான்.

இருட்டில் வெகு அருகே துப்பாக்கி வெடி கேட்டது. உடனே ஒரு பெண்மணியின் அபயக்குரலும் ஒலித்தது, "உதவி! உதவி! காப்பாத்துங்க! கொள்ளைக்காரங்க..."

தந்தையின் தடித்த கை சதீஷின் தோளைப் பிடித்துத் தடுத்தது. "பொறு" சதீஷ் நின்று கண்களால் இரவை அளந்தான்.

ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு யுகமாய்க் கழிந்தது. திடீரென்று மான்சந்த் வீட்டின் மீது ஒரு கரிய நிழலுருவம் தோன்றி மையிருட்டில் மறைந்தது.

"கொள்ளைக்காரங்க மான்சந்த் வீட்டுக்கூரை மேல இருக்கிறாங்க" என்று கிசுகிசுத்தான் சதீஷ். "நாம அவருக்கு உதவி செய்யணும்"

"உஷ்... சத்தம் போடாத. நாம மத்தவங்களையும் கூப்பிடணும்..."

"நான் போறேன்" என்று அவன் முன் வாயிலைக் கடக்கப் போனான்.

பாதிதூரம்கூடத் தாண்டியிருக்கமாட்டான். அதற்குள் மூன்று துப்பாக்கி வெடிகள் காற்றைப் பிளந்தன. "கதவைத் திறங்க. பயந்தாங்கொள்ளிகளே, இல்லேன்னா உடைச்சிட்டு உள்ள நுழைவோம்..."

அதைத் தொடர்ந்து ஒலித்த மூதாட்டியின் வறண்ட வீறிடல், சதீஷின் முதுகுத்தண்டில் நடுக்கத்தை மூட்டிற்று. அவன் நிலைகொள்ளாமல் தவித்தான். "அவங்க வெளிக் கதவை உடைச்சு உள்ள புகுந்துட்டாங்க... நா உடனே உதவிக்கு ஆள் சேர்க்கணும்" என்று எண்ணமிட்ட அவன் சுவரோடு ஒட்டினாற்போல நிழல் மாதிரி நகர்ந்து சந்துக்குள் சத்தமில்லாமல் ஓடினான்.

nbt.india
एकः सूते सकलम्

வழியில் எல்லாக் கதவுகளயும் தட்டிக்கொண்டே, “திறங்க, உதவி! உதவி! கொள்ளைக்காரங்க மான்சந்த் வீட்டில புகுந்திருக்கிறாங்க! காப்பாத்துங்க!” என்று கத்தினான்.

கதவுகளைத் திறந்து, தூக்கம் கலையாத கண்களால் அவனை நோக்கி விழித்தவர்கள் எல்லோரும், “என்ன விஷயம் சதீஷ்? துப்பாக்கிச் சத்தம் கேட்ட மாதிரி இருந்ததே...” என்று வினவினார்கள்.

“திருடங்க...கொள்ளைக்காரங்க” என்று அவன் மீண்டும் கத்தினான். “மான்சந்த் வீட்டில் நுழைஞ்சிருக்கிறாங்க. அவங்க ஊரைச் சூறையாடுறதுக்கு முன்னால உங்க துப்பாக்கிகளை எடுங்க... சீக்கிரம்...”

“துப்பாக்கிகளா?” ஒரு கிழவர் ஆச்சரியமாய்க் கேட்டார். “கிராமத்தில ஏது துப்பாக்கி? நாம ஏழைங்க. முட்டிகளாலதான் மோதமுடியும். கொடுப்பதற்கும் உயிரைத் தவிர வேற ஒண்ணுமில்லை”

“ஆனாலும் நாம் போராடுவோம். கழிகளையும் கற்களையும் இரும்புக் குண்டாந்தடிகளையும் எடுங்க” கத்தினான் ஒருவன்.

“கொள்ளைக்காரங்க! கொள்ளைக்காரங்க!” என்று மேலும் வீடு வீடாய்க் கத்திக்கொண்டே ஓடினான் சதீஷ்.

காட்டுத்தீப்போல் தகவல் பரவியது. ஊரில் எல்லா மூலைகளிலிருந்து விறைத்த முகத்துடன் அரிவாள்கள், தடிக்கம்புகள் சகிதம் மக்கள் கும்பலாய்த் திரண்டு மான்சந்த் வீட்டை நோக்கி வந்தார்கள்.

சற்றுத் தொலைவிலிருந்து, “ஏ, எலிக்கூட்டமே, எல்லாரும் திரும்பிப் போயிருங்க... இல்லைன்னா நாய்களைச் சுடுற மாதிரி உங்க எல்லாரையும் சுட்டுப் பொசுக்கிருவோம்” என்ற கொள்ளையரின் கர்ஜனை கேட்டது.

“ஆ! இவங்க நம்மைக் கொன்று விடுவாங்களாம்!”

“ஆமா! உங்க ஒவ்வொருவரையுந்தான்!” இரண்டு தோட்டாக்கள் இருளில் சீறின.

“நாம வீட்டைச் சூழ்ந்து கொள்ளணும்” என்று சன்னமான

nbt.india एकः सूते सकलम्

தொனியில் சொன்ன சதீஷின் தந்தை, "எப்படியாவது அந்தச்சுவர் மீது ஏறுங்க" என்றார்.

"எப்படி?" தொங்குமீசை ஆசாமி ஒருவன் கேட்டான். அவனது ஒல்லியான உடம்பு அவன் அணிந்திருந்த ஆடைக்குள் ஆடியது. "நம்ம மூக்குநுனி தெரிந்தாலே போதும், உடனே அவங்க சுட்டுருவாங்களே..."

"இருட்டு நமக்குச் சாதகமா இருக்கு. நம்மை அவங்க பாக்க முடியாது" என்றான் விநோத்குமார் ஃபூல்சிங். "வாங்க போவோம்."

"நம்மால கூடத்தான் அவங்களைப் பாக்கமுடியாது" என்று கொட்டாவி விட்டான் அந்த ஒல்லி ஆசாமி.

இப்படி விவாதம் நடக்கும்போதே, சதீஷ் மெதுவாக நழுவினான். ஒவ்வொரு மூலை முடுக்கும் பூனை மாதிரி நன்றாகப் பழக்கமானபடியால் அவன் அடிமேல் அடி வைத்துத் தங்கள் வீட்டு முற்றத்திலிருந்து மான்சந்த் வீட்டுச்சுவர் மீது ஏறினான். சில்லிட்ட சொரசொரப்புக் கற்களை ஒட்டி உராய்ந்து உச்சிக்குப் போய், பக்கத்து வீட்டின் வெளிமுற்றத்தைப் பார்த்தான். இரண்டு நிழலுருவங்கள் நகர்ந்து இருளில் மறைந்தன. வலது மூலையில் புளிய மரத்துக்குப் பின்னாலிருந்து பாட்டரி விளக்கு ஒளிர்ந்தது. திடீரென்று பாய்ந்த அதன் ஒளிக்கதிர் சதீஷின் கண்களைக் கூச வைத்தது. தரையில் இறங்கித் தவழ்ந்து கொண்டேபோன அந்த ஒளிப் பிழம்பு, கதவுகள் மீது தாவி அல்லாடிற்று.

"யாராவது அசைஞ்சா தொலைஞ்சீங்க" என்று மரத்துக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கர்ஜித்தது.

அங்குமிங்கும் அசைந்தாடிய அந்த ஒளிப்பிழம்பு, சதீஷ் சட்டென்று பதுங்காமல் இருந்திருந்தால் அவன் முகத்தில் பட்டிருக்கும். "திருட்டுத்தடியன்க..." என்று பல்லைக் கடித்து முணுமுணுத்தான் சதீஷ். "உங்களை ஒருகை பார்த்துட்டுத்தான் மறுவேலை" முற்றத்திலிருந்த மூன்று தூண்களில் ஒன்றின் பின்னாலிருந்து ஓர் உருவம் குனிந்து, "எலிகளே! உங்க வளைக்குத் திரும்பி ஓடுங்க!" என்று எக்காளமிட்டுச் சிரித்தது.



nbt.india
एकः सूते सकलम्

எல்லையற்ற கோபத்துடன் சதீஷ் முன்னோக்கித் தவழ்ந்து வீட்டினருகே வந்தான். துப்பாக்கியைத் தயாராய் நீட்டியவாறு, தனது மிருகபலத்தைப் பறைசாற்றுகிற மாதிரி கால்களை அகட்டி எகத்தாளமாகச் சிரிக்கும் அந்த உருவத்தின் மீது வைத்த கண்ணை வாங்காமலேயே நெருங்கி வந்தான்.

ஒளிக்கதிர் சதீஷின் பக்கம் திரும்பியது. உடனே சுவர் உச்சியில் பதுங்கிப் படுத்துக்கொண்டான். இதயம் படபடத்தது. பொறுமையாய் இருந்தான். அவர்கள் பார்வையில் பட்டுவிட்டால் பிணமாக வேண்டியதுதான். நல்லவேளை, சுமார் மூன்றடி தூரத்திலேயே ஒளிவட்டம் நின்று தட்டாமாலை சுற்றிவிட்டுப் பின்னர் கதவுகளுக்கே மீண்டும் போயிற்று. சதீஷ் விரல்களால் சுவரை நோண்டினான். ஒரு செங்கல் ஆட்டங்கொடுத்தது. அசைத்து அசைத்து அதைப் பெயர்த்தான். மறுவினாடி மண்டிபோட்டு உட்கார்ந்தான். தன் பலத்தைத் திரட்டிக் குறிபார்த்து, பத்து கஜ தூரத்தில் நிற்கும் அந்தத் துப்பாக்கிக்காரன் மீது அக்கல்லை வீசினான். கல் பாய்ந்து தாக்கிய அதிர்ச்சியில் துப்பாக்கி கையிலிருந்து சிதற அவனும் தரையில் அலறி விழுந்தான். உடனே தற்காப்புக்காகச் சதீஷ் தன் வீட்டுப் பக்கத்துக்குத் தாவுகையில், தள்ளாட்டத்துடன் எழுந்துவிட்ட அந்தக் கொள்ளைக்காரன் ஆத்திரம் பொங்க, “பிடி அவங்களை, கொன்று போடு” என்ற ஊளையிடுவதைப் பார்த்தான். துப்பாக்கியைக் கன்னத்துக்குப் பக்கத்தில் பிடித்து, விசையைத் தட்டி இழுத்தான். ஒருதரம், இருதரம், மூன்றுதரம்... ஊகூம், துப்பாக்கி மௌனம் சாதித்தது.

சதீஷ் திருப்தியுடன் கீழே குதித்தான். திரும்பித் தெருவுக்கு ஓடி நேரே தன் தந்தையின் கைகளில் போய் விழுந்தான். “நம்மால் அவர்களைச் சமாளிக்க முடியுமான்றது சந்தேகந்தான். அவங்க ஒன்பது பேர் கையிலும் துப்பாக்கிகள் இருக்கு. விளக்கும் இருக்கு. நம்மிடம் இரண்டுமில்லை” என்று அவர் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.

“நம்மகிட்ட துப்பாக்கிகள் இல்லை, சரிதான். ஆனா

nbt.india एकः सूते सकलम्

விளக்கைக் கொண்டு வரலாமே” என்றான் சதீஷ். உடனே திரும்பி, சுவரோரமாய்ப் போய் மூலையில் பயத்துடன் கத்துகிற கன்றுக்குட்டி இருக்குமிடத்தை அடைந்தான். அவசர அவசரமாய்க் கைநிறைய வைக்கோலை அள்ளிப் பந்து





nbt.india
एक: सूते सकलम्

போல் சுற்றி வைத்தான். கன்றுக்குட்டியை மெல்ல வருடிச் சமாதானப்படுத்தினான். பிறகு சந்துக்குத் திரும்பி ஓடி, மான் சந்த் வீட்டு முன்புறம் கிராமவாசிகள் கூடி நின்ற இடத்துக்கு வந்தான்.

கத்தார் சிங் அரிவாளை ஆட்டிக்கொண்டே, "கற்களை இன்னும் நிறைய கொண்டு வாங்க. கிராமத்தைக் காப்பாத்துற காரியத்தில் இறங்கியே ஆகணும்" என்று கத்தினான்.

தோள் அகன்ற அந்த ஆளைத் தொட்டு, "மாமா, தீப்பெட்டி இருக்கா?" என்று கேட்டான் சதீஷ்.

"தீப்பெட்டியா?" என்ற முதலில் புரியாமல் விழித்த கத்தார் சிங் உடனே தெளிந்து, "ஓகோ, தீப்பெட்டியா" என்ற தன் சட்டைப் பையில் குடைந்தான். ஒரு தீப்பெட்டியை எடுத்துத் தந்தான். பிறகு மற்றவர்களைப் பார்த்து, "ஏன் இப்படி எல்லாரும் கோழிக்குஞ்சுகளா நிக்கிறீங்க? ஏறுங்கள் கூரைமேல. உடையுங்க கதவை" என்று சத்தம் போட்டான். "இதோ நான் சண்டையிடப் போறேன்" என்று நகர்ந்தான்.

"நானுந்தான்" என்ற தொடர்ந்தார் சதீஷின் தந்தை.

"நானும்..." என்று முனகிய சதீஷ் தன் பழைய இடத்துக்கு நழுவினான். சுவர் அருகே வந்தான். வைக்கோல் சுருளைப் பற்ற வைக்கத் தீக்குச்சியைப் உரசிய போது கைகள் ஆடின. இதயம் படபடத்தது. பந்தைக் கொளுத்தியதும் அது புசுபுசுவெனப் பற்றிக்கொண்டது. புகை கண்ணைக் கரித்தது. தொண்டை கமறிற்று, இருமினான். சுவரில் இருந்த ஒரு வெடிப்பின் வழியே எச்சரிக்கையுடன் இருள் மண்டிய முற்றத்தைப் பார்த்தான். சுழல் விளக்கு அணைக்கப்பட்டிருந்தது. "இப்போதே செஞ்சாதான் உண்டு. அப்புறம் நேரம் வாய்க்காது" என்று தோன்றிற்று. வெடிப்புக்குள் புகுந்து, கொளுத்தி வைத்திருந்த பந்தை மான் சந்த் வீட்டு முற்றத்தின் மையத்தில் தூக்கிப் போட்டான்.

இருட்டில் எரிநட்சத்திரம் போல் பாய்ந்த அது தரையில் விழுந்தது. முற்றம் முழுக்க வெளிச்சமாயிற்று. நிழலுருவங்கள் தூண்களுக்கும், மரங்களுக்கும், பெட்டிகளுக்கும் பின்னால் தாவிப் பதுங்கின. "சுடு அவனை, சுடு"

nbt.india एक: सूत्रे सागरम

சதீஷ் ஓட்டமாய் ஓடினான். தோட்டாக்கள் விர்ரென்று சீறிப்பாய்ந்தன. சில அங்குலங்கள் இடைவெளியில் அவன் மீது படாமல் பறந்தன. வேட்டையாடப்படும் முயலைப் போல வளைந்து நெளிந்து அவன் கொல்லைப் பகுதியில் ஓடினான்.

“ஆ!” தாடி வைத்த ஒரு தடித்த ஆள் வராந்தாவிலிருந்து கத்தினான். “தப்பிக்கவா பார்க்கிறாய்? பிடி இதை” என்று சுடுவதற்குத் துப்பாக்கியை உயர்த்தினான்.

சதீஷ் இடதுபுறம் பாய்ந்து சாணி தட்டி அடுக்கிய பெரிய வரட்டிக் குவியலுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டான். மூச்சு இரைத்தது. ஊசிகளைக் கொண்டு குத்துவதுபோல முதுகுப்புறமெல்லாம் வலித்தது. குவியலுக்குள்ளேயே புகுந்து தன்னை மறைத்துக்கொண்டான். வரட்டிக் குவியல் மீது குண்டுகள் பாய்ந்து துளைத்தன. பிறகு சற்று நேரத்தில் ஓய்ந்தன. “தீயைத் தள்ளிவிடு... மிதி” என்று ஒரு கொள்ளைக்காரன் உறுமினான்.

‘ஓ...அதை அணையவிடக்கூடாது...அதுதான் நமக்கு நல்ல ஆயுதம்’ என்று எண்ணினான் சதீஷ். குவியலிலிருந்து வெளிப்பட்டு ஓடிவந்து வீட்டைப் பார்த்தான். கறுப்பு உடைக்காரன் ஒருவன், எரியும் வைக்கோலை நோக்கிப் போவது தெரிந்தது. அதை அவன் தள்ளப் போன சமயத்தில் ஒரு செங்கல் அவன் தோளில் விழுந்தது. அவன் தடுமாறி விழுந்தான்.

சுவருக்குப் பின்னால் வெற்றிப் புன்னகையுடன் சித்தப்பா கிஷன் மறைவதைச் சதீஷ் பார்த்தான்.

“பிடியுங்கள் அவர்களை, பிடியுங்கள்” என்ற தந்தையின் அறைகூவல் சதீஷுக்குப் புதுத்தெம்பூட்டியது. சுற்றுமுற்றும் அலசிய அவன் கைகளுக்கு இரண்டு செங்கற்கள் அகப்பட்டன. ஒன்றை எடுத்து ஆபத்தைக்கூட மறந்து, நிமிர்ந்தான். தள்ளாடியபடி எழுந்து நின்ற அந்தக் கொள்ளைக்காரன் மீது அதை வீசினான். அது அவன் முகவாயைத் தாக்கிற்று. அதிர்ந்து அவன் சாய்ந்தான். அவன் கை தாடைக்கு விரைந்தது. வலியால் துடித்தான். கோபத்தில் முகம் கோரமாய் விறைக்க அவன் திரும்பி,

தன்னைத் தாக்கியது யாரெனப் பக்கவாட்டில் பார்த்தான். தீ மிதி வேலையை விட்டு விட்டு தாக்கியவனைத் துரத்தத் தயாரானான். எரியும் வைக்கோலின் சுடரில் ஒருகணம் இருவர் விழிகளும் சந்தித்தன. ஒரு மனிதனின் கண்களில் இவ்வளவு வெறுப்பையும் வெறியையும் சதீஷ் இதற்கு முன் கண்டதேயில்லை. அவன் பதற்றத்துடன் குனிந்து அடுத்த செங்கல்லையும் எடுத்தான். இம்முறை அந்த ஆளின் நெற்றியைக் குறிவைத்துத் தாக்கினான். கால்கள் பின்னி இரண்டு முறை சுற்றிய அந்த ஆள் சுருண்டு விழுந்தான்.

சதீஷின் உதடுகள் சந்தோஷத்தில் துடித்தன. அவர்களை வீழ்த்திவிடலாம் என்ற உத்வேகத்தில் இன்னொரு செங்கல்லைத் தேடி எடுத்து, ஒரு மாட்டுவண்டிக்குப் பின்னால் இருந்த சில கொள்ளைக்காரர்களை நோக்கினான். 'குறி தவறிவிடக்கூடாதே' என்ற சிந்தித்தான். ஆனால் தீயின் ஒளி, அவனது ஒளிவிடத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

சதீஷ் வளைந்து குறிபார்த்த தருணத்தில் ஒரு குண்டு சீறிப்பாய்ந்து அவனது முகத்தின் வலப்புறத்தில் தாக்கிற்று. கல்லைக் கையில் ஏந்தியவாறே சதீஷ்குமார் ஃபூல்சிங் மூர்ச்சித்துத் தரையில் சாய்ந்தான்.

"சதீஷ், மகனே!" என்று ஒரு குரல் அலறிற்று. தந்தையின் அந்தத் தாபக்குரலோ, கொதித்த கிராமவாசிகளின் கோபக் கூச்சலோ சதீஷுக்குக் கேட்கவேயில்லை. எல்லாப் பக்கங்களில் இருந்தும் கிராமவாசிகள் முற்றத்துக்குள் பிரவேசித்து மொய்த்தார்கள். தன் அண்ணன் தன்னை ஓர் அறைக்குள் கொண்டுபோய்ப் படுக்க வைத்துத் தன்னைப் பரிவும் வியப்புமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தது மட்டும் சதீஷுக்கு மங்கலாய்த் தெரிந்தது. அதற்குப் பிறகு அவனுக்கு எதுவுமே தெரியவில்லை.

மான்சந்த் வீட்டு முற்றத்தில் கிராமவாசிகள் கற்களையும் கம்புகளையும் கொண்டு இரண்டு மணி நேரத்துக்கு மேல் கடும் போர் புரிந்தது அவனுக்குத் தெரியாது. தங்களையும், தங்கள்

nbt.india
एक: सूते सकलम

குடும்பத்தாரையும் காப்பாற்ற அவர்கள் அரிவாள்களாலும் வெறுங்கைகளாலும்கூடப் போராடினார்கள். கொள்ளைக் கூட்டத் தலைவன் பிடிபட்டுக் கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்டுப் புழுதியில் மண்டியிடும் வரை அவர்கள் போரிட்டார்கள்.

கடைசியாகப் போலீஸார் அவனையும் அவனது கூட்டாளிகளையும் கைது செய்து கொண்டு போனார்கள். அவ்வூர் மக்கள் என்றும் மறக்க முடியாத நிகழ்ச்சி அது.

ஒன்பது கொடூரமான கொள்ளைக்காரர்களிடமிருந்து கிராமத்தைக் காப்பாற்ற உதவிய காரியத்தில் தனது வலது கண்ணைப் பறிகொடுத்த அந்த வீரச்சிறுவனையும் ராம்நகர்வாசிகள் எவரும் மறக்கவியலாது.

nbt.india
एकः सूते सकलम्

# குறிப்பும் புகைப்படங்களும்



*1.* சயால் லானுபாய் போயா *1967* ஜூன் *1*ஆம் தேதி குஜராத்தில் பிறந்தாள். தொடக்கப் பள்ளியில் படித்தாள். குஜராத்தி பேசுகிறாள். இரண்டு சகோதரர்கள், ஒரு சகோதரி. தந்தை ஒரு பாட்டாளி. இசை, வாசிப்பு, விளையாட்டு முதலியன பொழுதுபோக்குகள்.



*2.* சி. கோவிந்தன் தமிழ்நாட்டில் *1966*, ஏப்ரல் *15* அன்று பிறந்தான். குருபர உயர்நிலைப்பள்ளியில் படித்தான். தமிழும் ஆங்கிலமும் பேசுகிறான். ஆறு சகோதரர்கள், இரண்டு சகோதரிகள். தந்தை கூலிவேலை செய்பவர். இசை, படிப்பு, விளையாட்டு முதலியன பொழுதுபோக்குகள்.



*3.* சோனியா சின்ஹா பீகாரில் *1969* நவம்பர் *3*ஆம் தேதி பிறந்தாள். பாட்னாவில் செயின்ட் ஜோஸஃப் கான்வென்டில் படித்தாள். ஹிந்தியும் ஆங்கிலமும் பேசுகிறாள். ஒரு சகோதரன், ஒரு சகோதரி. தந்தை குழந்தைகள் மருத்துவர். இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ள தீ விபத்தில் தன் தந்தையை அவள் இழந்தாள். படிப்பதிலும் விளையாட்டுகளிலும் விருப்பம் உண்டு.

4.சத்ருக்னாலால்சாஹு மத்தியப்பிரதேசத்தில் 1966 டிசம்பர் 16ஆம் தேதி பிறந்தான். துர்க் என்னுமிடத்தில் நேரு தொடக்கப் பள்ளியில் படித்தான். சத்தீஸ்கரி மொழியும், ஹிந்தியும் பேசுகிறான். பெற்றோரை இழந்து, ஜிலா ஸாஹு சிங் என்பவரால் வளர்க்கப்பட்டான். கிராமிய நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், துணிகரக்கதைகள் படித்தல் முதலியவற்றில் ஈடுபாடு கொண்டவன்.





5. ஃபெலிஸிடஸ் ஸோரங் ஒடிஷாவில் (ஒரிசா) 1950 ஜூன் 21ஆம் தேதி பிறந்தாள். மெட்ரிகுலேஷன் முடித்து, ரூர்கேலா அரசு மருத்துவமனையில் நர்ஸ் பயிற்சி பெற்றாள். ஒரியா, ஹிந்தி, ஆங்கிலம் பேசுகிறாள். சகோதரர் இருவர், சகோதரிகள் ஐவர். தந்தை ஒரு விவசாயி. இசையிலும் கைத்தொழிலிலும் ஈடுபாடு உண்டு.

6. சதீஷ்குமார் ஃபூல்சிங் உத்தரப்பிரதேசத்தில் 1968இல் பிறந்தவன். பள்ளி சென்று படித்ததில்லை. ஆனால், மற்றவர் கால்நடைகளைப் பராமரித்துத் தன் வறுமைக் குடும்பத்தின் வருவாய்க்கு உதவினான். ஹிந்தி பேசுகிறான். இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு. தந்தை கூலி வேலைக்காரர்.



Lasertypeset at Capital Creations, New Delhi and
printed at Educational Stores, Ghaziabad, U.P.